விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 099 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 14 வெள்ளிக்கிழமை (28.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பயனுள்ள விதத்தில் கூட்டத்தை நடத்துக


### தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அர்ச்சுனா எம்.பியிடம் மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

பயனுள்ள விதத்தில் கூட்டத்தை நடத்துக எனத் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அர்ச்சுனா எம். பியைப் பார்த்து பொதுமக்கள் கோரிக்கையை முன்வைத்தனர்.

தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் பிரதேச செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தலைமையில்

15ஆம் பக்கம் பார்க்க





அன்பு ஜவஹர்சா எழுதும்

### அரசாங்க ஊழியர்களின் 2025 சம்பள அதிகரிப்பு

10ஆம் பக்கம் பார்க்க

## புன்னாலைக்கட்டுவனில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் கஞ்சா செடி வளர்த்த குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் புகையிலைத் தோட்டத்தில், புகையிலைக் கன்றுகளுக்கு

15ஆம் பக்கம் பார்க்க

### மிகவும் நேர்மையான முறையில்

# திஸ்ஸ விகாரை சர்ச்சைக்கு தீர்வு



### புத்தசாசன அமைச்சர் சுனில் செனவி

(கொழும்பு)

மிகவும் நேர்மையான முறையில் திஸ்ஸ விகாரைப் பிரச்சினைகள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்கும் என புத்த சாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி, மன்னாரிலும் மே 6ஆம் திகதியே தேர்தல்

(கொழும்பு)

பூநகரி, மன்னார் மற்றும் தெஹியத்த கண்டிய பிரதேச சபைகளுக்கு மே மாதம் 6ஆம் திகதியே தேர்தல் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மூன்று பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் 2025 மார்ச் 10 அன்று கோரப்பட்டது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நேற்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்த நிலை

15ஆம் பக்கம் பார்க்க

### பூநகரி பிரதேச சபைக்கு

## சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் ஏற்பு

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேச சபைக்கான வேட்பு மனு ஏற்கும் பணி நேற்று நண்பகல் நிறைவடைந்த நிலையில் பூநகரி பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக சமர்ப்பித்த அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் எஸ்.முரளிதரன் தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

### ஏப்ரல் 22, 23, 24ஆம் திகதிகளில்

## தபால் மூல வாக்குப் பதிவு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் வாக்குப் பதிவு ஏப்ரல் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட நாட்களில் தபால் வாக்குகளைப் பதிவு செய்ய முடியாதவர்களுக்கு மாற்றுத் திகதிகள் - ஏப்ரல் 28 மற்றும் 29 ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் மே

15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசு மக்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றது



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(மொனராகலை)

அநுர அரசாங்கம் மக்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் வீதி விபத்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் நீர்வேலி மேற்குப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி

02ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்

### அமைச்சர் சந்திரசேகர்



(மட்டக்களப்பு)

தமிழர் தனித்துவம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமே இல்லை என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமலாக்கப்பட்டோரில் 19 பேர் உயிருடன் உள்ளனர்

## விபரங்களை விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் என்கிறது காணாமல்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு

(கொழும்பு)

காணாமல் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவினால் காணாமல் போனவர்களில் இதுவரையில் 19 பேரை கண்டறிந்துள்ளதாக ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி தற்பரன் தெரிவித்தார்.

காணாமல்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் ஊடகவியலாளர்களுக்கு இடம்பெற்ற கருத்தமர்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

காணாமல்போனோரைக் கண்டறியும் செயலகங்களில் இதுவரை 16 ஆயிரத்து 966 பேர் காணாமல் போயுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 3 ஆயிரத்து 742 பேர் படையினர் மற்றும் பொலிஸார் எனப் பாதுகாப்புதரப்பினராக காணாமல் போயுள்ளதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் 6ஆயிரத்து 449 பேரின் விசாரணைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 10 ஆயிரத்து 517 பேர் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

2000ஆம் ஆண்டிற்கு பின்பு 7 ஆயிரத்து 406 பேரும் 2000ஆம் ஆண்டிற்கு முன்னர் 9 ஆயிரத்து 560 பேரும் காணாமல் போயுள்ளதாக ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதிலே 2000ஆம் ஆண்டிற்குப் பின்னர் காணாமல்போன 7ஆயிரத்து 406 பேரில் 6 ஆயிரத்து 449 பேர் தொடர்பான விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளது.

நிறைவு பெற்ற விசாரணைகளில் இருந்து 19 பேர் உயிரோடு இருப்பதனையும் கண்டறிந்துள்ளோம். அவர்களது விபரங்களை 2024 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் இணைத்துள்ளோம். அவை விரைவில் வெளிவரும்.

அதேவேளை 2ஆயிரத்து 604 பேர் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். 407 பேர் மரணச் சான்றிதழிற்கான சிபார்சைப் பெற்றுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணத்திற்கு 4ஆயிரத்து 408 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றார். (ம-7)


கார்கள் வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு

072 564 6735

(3770)


# பொருளாதார மீட்சிக்கு சீர்திருத்தங்கள் அவசியம்

## சுட்டிக்காட்டியது ஐ.எம்.எப்

இலங்கையின் பொருளாதார மீட்சி வேகம் பெற்று வருவதாகவும் பொருளாதார சீர்திருத்தங்கள் இலங்கையை மீட்க உதவுவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் இயக்குநர் ஜூலி கோசாக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

இரண்டு வருட பொருளாதார சுருக்கத்திற்குப் பின்னர், இவ் ஆண்டிலும் இலங்கையில் மீட்சி தொடரும் என்று எதிர்பார்க்கிறோம்.

மேலும் இலங்கையின் பொருளாதாரம் இன்னும் பாதிக்கப்படக்கூடியதாகவே உள்ளது எனவே பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மை நீடித்து நிலைத் திருப்பதை உறுதிசெய்ய சீர்திருத்த உந்துதல் நிலைத்திருப்பது மிகவும் முக்கியம்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் ஒரு பகுதியாக, சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 334 மில்லியன் அமெரிக்க டொலர்களை அண்மையில் வழங்கியுள்ளது.

என்று குறிப்பிட்ட அவர், இதனடிப்படையில் இலங்கைக்கு மொத்த நிதி உதவியாக 1.34 பில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ளது என்றார். (ம-7)

# பண்டிகைக் காலத்தில் அரிசி தட்டுப்பாட்டிற்கு இடமளியோம்

## வர்த்தக அமைச்சர் உறுதி

பண்டிகைக் காலத்தில் நாட்டினுள் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என வர்த்தக மற்றும் வணிக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது நெல்லுக்கான தட்டுப்பாடு இல்லை. எனவே அரிசிக்கான தட்டுப்பாடு ஒருபோதும் ஏற்படாது.

விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் நெல்லுக்கான நிர்ணய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதனை மீறிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அரசாங்கம் என்ற வகையில் அரிசியை இறக்குமதி செய்யவும் தயாராக உள்ளோம் என்றார். (ம-7)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ - 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com


## திஸ்ஸ...

நுவரெலியாவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண திஸ்ஸ விகாரை பற்றி நிறையச் செய்திகள் இருந்தாலும், அந்த விகாரை தொடர்பான தகவல்களும் எங்கள் தலையீடுகளும் நீண்ட காலமாக நடந்து வருகின்றன.

ஓர் அரசாங்கமாக, திஸ்ஸ விகாரை தொடர்பான பிரச்சினையில் தேவையான நேர்மையான தலையீட்டை நாங்கள் எடுத்துள்ளோம்.

ஒரு அமைச்சகமாக இருந்தாலும், அது பாராளுமன்றத்தில் தெளிவாகத் தலையிட்டு தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது.

திஸ்ஸ கோயில் தொடர்பில் அப்பகுதி மக்கள் எங்களைச் சந்தித்தனர். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனும் எங்களைச் சந்தித்தார்.

அவர்களுடன் நாங்கள் சுமுகமான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

எனவே சிலர் இந்தப் பிரச்சினையை ஒரு பிரச்சினையாக எழுப்பி மத நல்லிணக்கத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகத் தெரிகிறது. அந்தக் குழு மத நல்லிணக்கத்தை அழிப்பதன் மூலம் இந்த அரசாங்கத்தைப் பற்றித் தவறான கருத்தை உருவாக்க முயற்சிக்கிறது.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உண்மையாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் தலையிட்டோம்.

முப்பது ஆண்டுகாலப் போருக்குப் பிறகு எழும் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு மிகவும் உணர்திறன் வாய்ந்த பதிலை வழங்குவது ஒரு அரசாங்கமாக நமது பொறுப்பாகும், மேலும் இந்தப் பிரச்சினையை நாங்கள் எவ்வாறு தீர்ப்போம் என்பதை பொறுத்திருந்து பார்க்க முழு நாட்டையும் அழைக்கிறோம் என்றார். (ம-7)

## யாழ்ப்பாணத்தில்...

சந்திரராசா (வயது 72) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 14ஆம் திகதி அச்சுவேலியில் இருந்து நல்லூர் நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தவேளை பின்னால் வந்த முச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி மீது மோதியது.

இதில் குறித்த முதியவர் வீதியில் விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பினார்.

அதன்பின்னர் நேற்றுமுன்தினம் (26) அவருக்கு மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டபோது மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறலை முன்நோக்கி நகர்த்தியுள்ளது பிரிட்டன்!

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்



(கொழும்பு)

**இலங்கையின் உள்நாட்டுப்போரின்போது மனித உரிமை மீறல்களில் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக வெளிநாட்டு அரசாங்கங்கள் தொடர்ந்தும் இலக்குவைக்கப்பட்ட தடைகளை விதிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், ஐக்கியநாடுகள் சேகரித்துள்ள ஆதாரங்களை அடிப்படையாக வைத்து இலங்கையின் யுத்த குற்றவாளிகளிற்கு எதிராக வழக்குத் தொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.**

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதிஇயக்குநர் மீனாக்ஷி கங்குலி இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் உள்நாட்டு போரின்போது அட்டூழியங்களில் ஈடுபட்டனர் என குற்றம்சாட்டப் பட்ட நால்வருக்கு எதிராக தடைகளை விதித்துள்ளதன் மூலம் பிரிட்டன் பொறுப்புக் கூறலை முன்னோக்கி நகர்த்தியுள்ளது.

1983 முதல் 2009 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின்போது இரு தரப்பும் பரந்துபட்ட மனித உரிமை மீறல்கள்யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டன.

எனினும் தொடர்ந்து வந்த இலங்கையின் ஆட்சியாளர்கள் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதை மறைப்பதற்கும் அதற்கு காரணமானவர்களைப் பாதுகாப்பதற்கும் முயற்சி செய்துள்ளனர்.

சமூகத்தின் மீது தொடர்ந்து தாக்கத்தை செலுத்தும், மனித உரிமை மீறல்களிற்கான பொறுப்புக்கூறல் உட்பட, இலங்கையில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவது குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதியாக உள்ளதாக அந்த நாட்டின் வெளிவிவகார செயலாளர் டேவிட் லாமி தெரிவித்துள்ளார்.

பிரிட்டன்பயணத்தடை, சொத்துக்களை முடக்குதல் ஆகிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் தடைகளிற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை பதிலளித்துள்ள இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலை உள்நாட்டு பொறிமுறைகள் ஊடாகவே முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளதுடன் அதனை வலுப்படுத்துவதாக தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்நாட்டு போரின்போது இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான, ஆதாரங்களை சேகரிப்பதற்கான தொடர் தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் வெற்றிகரமாக நிறைவேற்றிய இணைத்தலைமை நாடுகளில் பிரிட்டனும் ஒன்று.

இலங்கை பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்காத வரை சர்வதேச நீதியே அவசியமானது. (நி-8)

## சாமர சம்பத் கைது



(கொழும்பு)

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சாமர சம்பத் தசநாயக்கவிடம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் ஊவா மாகாண முதலமைச்சராக அவர் பதவி வகித்த காலத்தில் ஏற்பட்ட ஒரு முறைகேடு தொடர்பாக நேற்றுக் காலை விசாரணை நடத்தப்பட்ட நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-8)

## வாக்காளர் ஒருவருக்கு 74-160 ரூபாய் வரை செலவிடலாம்

### வெளியிடப்பட்டது அதிவிசேட வர்த்தமானி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஒரு வேட்பாளர் ஒரு வாக்காளருக்கு அதிகபட்சமாக எவ்வளவு நிதி செலவு செய்யலாம் என்பதைக் குறிப்பிடும் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி ஒரு வேட்பாளர் ஒரு வாக்காளருக்கு ரூ.74 முதல் ரூ.160 வரை செலவிடலாம் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)

# பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை

## போக்குவரத்து அமைச்சு முடிவு

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த போக்குவரத்து அமைச்சு முடிவு செய்துள்ளது.

எதிர்காலத்தில் அத்தியாவசிய சேவைகளை சீர்குலைக்க யாருக்கும் இடமளிக்கப்படாது என்று பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி காலி-மாத்தறை பேருந்து சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தாக்குதலை நடத்திய லொறி மற்றும் முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் அதற்கு ஆதரவளித்தவர்கள் மீதும் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பிரதி அமைச்சர் மேலும் தெரிவித் தார்.

அனைத்து சந்தேக நபர்களும் தற்போது கைது செய்யப்பட்டு, எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். (நி-8)

# ஹொரணை பகுதியில் விபத்து மாணவர்கள் உட்பட 15 பேர் காயம்

(கொழும்பு)

ஹொரணை-ரத்னபுர சாலையில் இங்கிரிய அருகில் நேற்று வியாழக்கிழமை தனியார் பேருந்தும் சிறிய லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் 15 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்

காயமடைந்தவர்களில் லொறி ஓட்டுநர் மற்றும் உதவியாளரும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் பேருந்து ஹொரணை நோக்கியும், சிறிய லொறி இங்கிரிய நோக்கியும் சென்ற போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. (நி-8)

# பள்ளத்தில் விழுந்து பாரவூர்தி விபத்து

## சாரதி உட்பட இருவர் பலி



(ஹற்றன்)

கலவானை - மத்துகம வீதியில் அம்பலமஹேன பாலத்துக்கு அருகில் உள்ள பள்ளத்தில் விழுந்து பாரவூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, பாரவூர்தியில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்னேவ ரம்புக்கன பகுதியைச் சேர்ந்த ஜனக பாதும் குமார என்ற 27 வயதுடைய சாரதி மற்றும் உதவியாளராக இருந்த புலத்சிங்கள பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பதுடிகே பிரியந்த ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலத்சிங்கள பகுதியில் உள்ள ஒரு இறப்பர் தொழிற்சாலையின் இறப்பர் பால் ஏற்றிச் சென்ற பாரவூர்தியே விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிக்கோலஸ் பூரன் 'ரன்' மழை

## சன்ரைசர்ஸை 'ஈஸியா' வென்றது லக்னோ



தாக்கூரின் பந்துவீச்சும் பூரன், மார்ஷ் அரைச்சதமும் கைகொடுக்க லக்னோ அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

பிரிமீயர் லீக் தொடரின் ஹைதராபாத் நகரில் நடந்த 7ஆவது லீக் ஆட்டத்தில் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ள ஹைதராபாத் அணியும், ஏழாவது இடத்தில் இருக்கும் லக்னோ அணியும் மோதின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணி முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்ப வீரர்களாக டிராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் ஷர்மா களமிறங்கினர். அபிஷேக் சர்மா 6 ரன்னிலும், இஷன் கிஷான் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். அதன்பிறகு டிராவிஸ் ஹெட்டும், நிதிஷ் குமார் ரெட்டியும் சேர்ந்து ஓட்டங்களைச் சேர்த்தனர். டிராவிஸ் ஹெட் 47, நிதிஷ் குமார் 32 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். ஹென்ரிச் கிளாசன் 26 ஓட்டங்கள் எடுத்து இருந்தபோது ஆட்டமிழந்தார். அனிகெட் வர்மா 36, அபிநவ் மனோஹர் 2, அணித் தலைவர் பட் கம்மின்ஸ் 18, மொஹமட் ஷமி ஒரு ஓட்டத்திலும் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் ஹைதராபாத் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பந்துவீச்சில் லக்னோ அணி சார்பில் ஷர்துல் தாக்கூர் அதிகபட்சமாக 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**பூரன் விளாசல்**

கடின இலக்கை விரட்டிய லக்னோ அணிக்கு மார்க்ரம் (1) ஏமாற்றினார். பின் இணைந்த மிட்செல் மார்ஷ், நிக்கோலஸ் பூரன் ஜோடி கைகொடுத்தது. சிமர்ஜீத் சிங், அபிஷேக் சர்மா வீசிய 3, 5வது ஓவரில் தலா 2 சிக்சர் பறக்கவிட்டார் பூரன். மறுமுனையில் அசத்திய மார்ஷ், ஷமி ஓவரில் 2 சிக்சர் விளாசினார். ஜாம்பா பந்தை சிக்சருக்கு அனுப்பிய பூரன், 18 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 116 ஓட்டங்கள் சேர்த்த போது கம்மின்ஸ் "வேகத்தில்" பூரன் (70 ஓட்., 6 சிக்சர், 6 பவுண்டரி) வெளியேறினார்.

**மார்ஷ் கலக்கல்**

கம்மின்ஸ் பந்தில் வரிசையாக 2 பவுண்டரி அடித்த மார்ஷ், தன்பங்கிற்கு அரைசதம் கடந்தார். இவர், 52 ரன்னில் (2 சிக்சர், 7 பவுண்டரி) ஆட்டமிழந்தார். ஆயுஷ் படோனி (6), அணித் தலைவர் ரிஷாப் பன்ட் (15) சோபிக்கவில்லை. அடுத்து வந்த அப்துல் சமத், ஹர்ஷல் படேல், ஜாம்பா ஓவரில் தலா ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். இஷான் கிஷான் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய டேவிட் மில்லர் வெற்றியை உறுதி செய்தார்.



லக்னோ அணி 16.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மில்லர் (13), சமத் (22) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ம-7)

## ஐ.பி.எல் செய்தித் துளிகள்...

### சேப்பாக்கம் சி.எஸ்.கேவின் கோட்டை சவாலை எதிர்கொள்ளுமா ஆர்.சி.பி?-வாட்சன்

சி.எஸ்.கே - ஆர்.சி.பி அணி இன்று சேப்பாக்கம் மைதானத்தில் மோதவிருக்கிறது. இந்நிலையில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் அணி அபார வெற்றி பெற்றாலும், சென்னைக்கு எதிரான போட்டியில் பெரிய சவாலை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் அவுஸ்திரேலிய ஆல் ரவுண்டர் ஷேன் வாட்சன் கூறியுள்ளார்.

ஷேன் வாட்சன் ஜியோ ஹாட் ஸ்டார் நிகழ்ச்சியில் இவ்விடயம் பற்றி கூறுகையில், "சேப்பாக்கத்திற்கு வரும் ஆர்.சி.பி அணிக்கு புதிய சவால் காத்திருக்கிறது. குறிப்பாக சி.எஸ்.கே வசம் உள்ள தரமான பந்துவீச்சாளர்கள் குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

சி.எஸ்.கேவின் பலத்தை எதிர்கொள்ள ஆர்.சி.பி தங்கள் அணியின் வீரர்களை சேப்பாக்கத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும்.

ஆனால், சேப்பாக்கம் சி.எஸ்.கே வின் கோட்டை என்பதை மறக்கக் கூடாது" என்று வாட்சன் தெரிவித்துள்ளார்.(6-8)

## தொடரை வென்றது நியூசிலாந்து

ஐந்தாவது "ரி-20" போட்டியில் நியூசிலாந்து அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தித் தொடரை 4-1 எனக் கைப்பற்றி கோப்பை வென்றது.

நியூசிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட "ரி-20" தொடரில் பங்கேற்றது. நான்கு போட்டிகளின் முடிவில் நியூசிலாந்து 3-1 என ஏற்கனவே தொடரை கைப்பற்றியது. ஐந்தாவது போட்டி வெலிங்டனில் நடந்தது. "டாஸ்" வென்ற நியூசிலாந்து அணி "பவுலிங்" தேர்வு செய்தது.

பாகிஸ்தான் அணிக்கு முகமது ஹாரிஸ் (11), ஹசன் நவாஸ் (0), உமைர் யூசுப் (7), உஸ்மான் கான் (7), அப்துல் சமத் (4) ஏமாற்றினர். கப்டன் சல்மான் ஆகா (51), ஷதாப் கான் (28) கைகொடுத்தனர். பாகிஸ்தான் அணி 20 ஓவரில், 9 விக்கெட்டுக்கு 128 ரன் எடுத்தது. நியூசிலாந்து சார்பில் ஜேம்ஸ் நீஷம் 5 விக்கெட் சாய்த்தார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு டிம் செய்பர்ட், ஆலன் ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது. ஜஹாந்தத் கான் வீசிய 6 ஆவது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த செய்பர்ட், 22 பந்தில் அரைசதம் கடந்தார். முதல் விக்கெட்டுக்கு 93 ரன் சேர்த்த போது ஆலன் (27) அவுட்டானார்.

மார்க் சாப்மன் (3) நிலைக்கவில்லை. ஷதாப் கான் வீசிய 10ஆவது ஓவரில் "ஹாட்ரிக்" சிக்சர் விளாசிய செய்பர்ட் வெற்றியை உறுதி செய்தார்.

நியூசிலாந்து அணி 10 ஓவரில், 2 விக்கெட்டுக்கு 131 ரன் எடுத்து வெற்றி பெற்றது. செய்பர்ட் (97* ரன், 38 பந்து, 10 சிக்சர், 6 பவுண்டரி, "ஸ்டிரைக் ரேட்" 255.26), டேரில் மிட்செல் (2) அவுட்டாகாமல் இருந்தனர். (6-8)

## பயமறியாத இளம் இந்திய வீரர்கள்

### ஸ்டாய்னிஸ் புகழாரம்

அவுஸ்திரேலியாவின் ஓல்-ரவுண்டரும் பஞ்சாப் கிங்ஸ் அணி வீரருமான மார்கஸ் ஸ்டாய்னிஸ் இளம் இந்திய வீரர்கள் பயமில்லாமல் விளையாடுவதாக கூறியுள்ளார். 18ஆவது ஐ.பி.எல் சீசனில் பஞ்சாப் கிங்ஸ் அணி தனது முதல் போட்டியில் குஜராத்தை வீழ்த்தியது.

இதில் அறிமுக இளம் வீரர் பிரியன்ஸ் ஆர்யா சிறப்பாக விளையாடினார். மும்பை அணியிலும் விக்னேஷ் புதூர் சிறப்பாக பந்து வீசினார். இந்நிலையில் ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் மார்கஸ் ஸ்டாய்னிஸ் கூறியதாவது,

குறிப்பாக இந்திய அணிக்காக விளையாடும் போது இளம் வீரர்கள் பயமில்லாமல் விளையாடுவதைப் பார்க்க சிறப்பாக இருக்கிறது. இதுவரை ஐபிஎல் போட்டிகளில் விளையாடாத சில பஞ்சாப் வீரர்கள் பிரமிக்க வைக்கிறார்கள். அதிகமான ஆஸி. வீரர்கள் அணியில் இருக்கிறார்கள். அதனால், இது சொந்த மண்ணில் இருப்பது போலவே இருக்கிறது.

நான் இங்கு மாறிய பிறகு இது எனது 2ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடராகும். அதனால் இது பழக்கப்பட்டதாகிவிட்டது. நான் ஐ.பி.எல்லை நேசிக்கிறேன். இதற்காக நான் காத்திருந்தேன் என்றார்.

பஞ்சாப் அடுத்த போட்டியில் ஏப்ரல் முதலாம் திகதி லக்னோ அணியுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## இன்றைய ஆட்டங்கள்




நேரம்: இரவு 7.30

சென்னை இடம்-சேப்பாக்கம் மைதானம் பெங்களூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோழியபுரம் பத்ம வெளியீடு

உலகம் முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருள் எவன்
அவ் உலகிற் பிறக்கும் விவாரங்கள் உறாத மேலாய் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டும் களைகண் எவன்
அந்த உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம்

கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும்
விரும்பும் அபவல் பலவும் மேன்மேல்-அருந்திக்
குணமுடையவனாய் வந்து பிரச்சினையைத் தீர்க்கும்
கணபதியே! எம் தீர்வுக்குப் பொறுப்பு.

முன்னொருநாள் "போர்த்துக்கேயர்" பறாளாய் நாடி
முழுவதுமே அழிவு செய வந்தார் தேடி
மின்னலென காகமெலாம் ஒன்றாய்ச் சாட
விழியழிந்து மொழிகுழறி அழுதார் ஓடி
விழியழிந்து மொழிகுழறி அழுதார் ஓடி
கன்னலென அன்னவரும் அருளைக்கூடக்
காத்தளித்த கணபதியே! கருணைத் தேவே!
பன்னலஞ் சேர் பஞ்சமுகப் பரனே! கோவே!
பறாளையுறை விநாயகரே ஆடிர் ஊஞ்சல்

**என் இனிய நெஞ்சங்களே!**

எங்கள் தீராத பிரச்சினையைத் தீர்க்க வந்தருளிய நீதியரசர் ஈசுர விநாயகரை அடியேனும் விடப்போவதில்லை. ஈசுர விநாயகரும் சந்தர்ப்பம் சூழ்நிலைகளை உருவாக்கித் தந்து தமிழ் மக்களின் பிரச்சினையை நிச்சயம் தீர்த்துத் தருவார். மேலும் மேலும் எங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும். எங்கள் அன்பின் நிமித்தம் விரைவாகக் காரியங்களைச் செய்து தருவார். அவருக்கு விரும்பிய மோதகம், அப்பம், சக்கரைப் பொங்கல், வெண் பொங்கல், அவல், கடலை எள்ளுப்பொறி, வடை, இராசவள்ளிக்கிழங்கு போன்ற நைவேத்தியங்களில் உங்களால் முடிந்தவற்றை வைத்து மேலும் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், விளாம்பழம், தோடம்பழம் எது கிடைக்கின்றதோ அவற்றை படைத்து தோத்திரம் பாடி தோப்புக் கரணம் போட்டு நெற்றியிலே குட்டி வணங்க நீங்கள் நினைத்த காரியமும் நிச்சயம் நிறைவேறும்.

**இறைவன் அன்பிற்கு அடிமையாகி விடுவார்.**

எனது வாழ்க்கை அனுபவத்தின் மூலம் எழுதுகின்றேன். நாங்கள் இறைவனிடம் எவ்வளவு அன்பு செலுத்துகின்றோமோ அவ்வளவிற்கு அவர் அன்பிற்கு அடிமையாகி விடுவார். அடியேனுக்குத் துன்பம் வருமுன்னரே "பாதுகாப்பாக இரு" என்று தரிசனத்தில் யானையாக வந்து காட்சி தருவார். எங்களுக்கு வரும் துன்பங்களை இறைவனால் தடுக்க முடியாது. காரணம் அது முன் வினைப்பயனால் வருகின்றது. அதை நாங்கள் இறை வழிபாடு மூலம் குறைக்கலாம். இறைவழிபாட்டால் கண்ணிலே வருவது புருவத்தோடு போய் விடும். விதியை மதியால் வெல்லலாம் என்பது இதுவே. அதாவது வரும் துன்பம் "விதி" அதனை இறை வழிபாடுகள் மூலம் குறைப்பது "மதி" எனவே இறைவனை வழிபட்டு வரும் துன்பங்களைப் போக்குவோமாக.

**இழந்த பொருள் எதுவாயினும் திரும்பிப் பெற விநாயகர் விரதம்.**

பஞ்ச பாண்டவர்கள் துரியோதனனின் வஞ்சகத்தால் நாட்டை இழந்து வனவாசம் சென்று விட்டனர். அங்கு அவர்கள் சூதமா முனிவர் என்பவரைச் சந்தித்தனர். அவரிடம் தாங்கள் நாட்டை இழந்த விடயத்தைக் கூறினார்கள். மீண்டும் ராஜ்யத்தைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று அவரிடம் கேட்டனர்.இழந்த பொருள் எதுவாக இருந்தாலும் அதைத் திரும்பிப் பெற "விநாயகர் விரதம்" அனுஷ்டிக்க வேண்டும் என்று சூதமா முனிவர் பஞ்ச பாண்டவர்களிடம் கூறினார். அத்துடன் விரதம் இருக்கும் முறையையும் அவர்களுக்கு எடுத்து கூறினார். அதன்படி பஞ்சபாண்டவர்கள் "விநாயகரை நினைத்து" விரதமிருந்து இழந்த ராஜ்ஜியத்தை மீண்டும் பெற்றுக் கொண்டனர். எதுவாயினும் விநாயகர் விரதமிருந்து அவரின் அருளைப் பெறுவோமாக.

**என் அன்பு உள்ளங்களே!**

அறிந்தும் அறியதாதும் ஆச்சரியம் ஆனால் அற்புதம்

"பிடித்து வைத்தால் பிள்ளையார்" சாணியைப் பிடித்து வைத்தாலும் சந்தனத்தைப் பிடித்து வைத்தாலும் பிள்ளையார் தான். இப்படியாக எல்லா இடத்திலும் எப்படி வேண்டுமானாலும் பிள்ளையார் இருந்தாலும் இந்தியாவிலே கோவை நகரில் உள்ள பிள்ளையாருக்கு "உலகிலே மிகப் பெரிய பிள்ளையார்" என்ற தனிச்சிறப்பும் பெருமையுமுண்டு. பிள்ளையார் சிலையின் உயரம் 16 1/2 அடி, அகலம் 11 1/2 அடி ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. உயரத்திற்கேற்ப பெருமையும் பெரும் சக்தியும் கொண்டவர். இவரின் நாமம் தேவேந்திரப்பிள்ளையார் உடுமலைக்கு அருகே குழியிலேயே சிலை செய்யத் தொடங்கினார். ஆச்சரியம்! என்னவெனில் சிலையை குழியிலிருந்து தூக்கி வாகனத்தில் ஏற்ற 28 நாட்கள் பிடித்தன. வாகனம் ஊத்துக்குழியிலிருந்து ஊர்ந்து ஊர்ந்து கோவை வருவதற்குள் 13 நாட்கள் ஆகின. கோவிலிலிருந்து இறக்கி வைப்பதற்கு 7 நாட்கள் ஆகிற்று. கோவையில் 10 சிற்பிகள் சேர்ந்து இரவு, பகலாக மேலாக வேலை செய்து சிலையைச் செதுக்கினார்களாம். இவரை இந்தப் பீட உயரம் 14 1/2 அடி, அகலம் 101/2 அடியில் செதுக்கப்பட்டது. பீடத்தின் மீது சிலை தூக்கி வைக்கப்பட்டு பீடத்துடன் சேர்த்து சிலையின் உயரம் 20 அடியாகும். பார்த்தீர்களா? கேட்கவே ஆச்சரியமாக இருக்கின்றது. முடிந்தால் சென்று தரிசித்து அவரின் அனுக்கிரகத்தைப் பெற்று வாருங்கள்.

**ஓங்கார ஒலி கேட்கும் விநாயகர்.**

காஞ்சிபுரத்தில் திருவோணகாந்தன் களி என்னும் கோவிலில் கர்ப்பக்கிரக மண்டபத்தின் நுழைவாயிலில் சுவரின் முகப்பில் விநாயகர் திருவடிவம் இருக்கின்றது. இவர் அருகில் போய் காதை வைத்துக் கேட்டால் ஓங்கார ஒலி கேட்கின்றது. நீங்களும் சென்று கேட்டுவிட்டு வாருங்களேன்.

**நிறம்மாறும் விநாயகர்**

**கேரளபுரம்** என்னும் கிராமம் வயல்வெளிகளும் குளங்களும் நிறைந்த இயற்கையான சூழலில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் அனைவரையும் வியக்க வைக்கும் அதிசய கணபதி கோவில் அங்கு உள்ளது. ஆறு மாதம் கறுப்பு ஆறு மாதம் செள்ளை நிறத்தில் காட்சி தருகின்றார். கன்னியாகுமரி மாவட்டம் கேரளபுரத்தில் இருக்கும் இந்த அதிசயப் பிள்ளையார் அதாவது தை 15 தொடக்கம் ஆடி 15 வரைக்கும் கறுப்பாகவும் அதன் பின்னர் 6 மாதங்கள் வெள்ளை நிறமாகவும் காட்சி தருகின்றார். கறுப்பாக மாறும் போது தலையிலிருந்தும், வெள்ளையாக மாறும் போது வயிற்றிலிருந்தும் நிறம் மாறத் தொடங்கும். பிள்ளையார் நிறம் மாறும் போது அவர் வீற்றியிருக்கும் அரச மரமும் ஒரு பக்கம் இலை உதிர்ந்தும் மறு பக்கம் உதிராமலும் இருக்கும். அது போல கோயில் கிணற்றில் உள்ள தண்ணீரும் விநாயகரின் நிறத்திற்கு ஏற்றால் போல நிறம் மாறும். கேட்கும் போது பார்க்க வேண்டும் போல் இருக்கிறதல்லவா? அதிசய கணபதியை தரிசித்து அவரின் அனுக்கிரத்தைப் பெற்று வாருங்கள்.

**பூவிழுங்கும் விநாயகர்.**

**தஞ்சாவூர் மாவட்டம்** திருச்சிற்றம்பலத்தில் இருக்கின்றது. " பூவிழுங்கும் விநாயகர்" கோவில். இங்கிருக்கும் விநாயகரின் செவியிலுள்ள தூவாரங்களில் நமது வேண்டுதல் களை நினைத்து வைக்கப்படும் பூக்களை விநாயகர் உள்ளே இழுத்துக்கொண்டால் நமது வேண்டுதல் நிறைவேறும்.நினைத்த காரியம் கைகூடும். பக்தர்களின் தன்னம்பிக்கை யாக இன்றும் பூவைக்கும் பழக்கம் நடைமுறையில் இருக்கின்றது. பார்த்தால் ஆச்சரியம் தான். விநாயகரின் அற்புதங்களைப் பார்த்து வாருங்கள்.

**விநாயகர் தீபம்**

இமயமலையில் 16 அடி உயரத்திலுள்ள கோமுக் என்ற குகையில் இருந்து கங்கை நதி உற்பத்தியாகிறது. இந்த இடத்தைக் "கங்கோத்திரி" என்று அழைப்பார்கள்.இங்கு கங்காதேவியின் கோயில் இருக்கின்றது.இந்தக் கோயிலை கார்த்திகை மாதத்தில் இருந்து வைகாசி மாதம் வரை பனி மூட்டம் காரணமாகத் தரிசிக்க முடியாது. ஆனால் கோயில் மூடும் போது உள்ளே ஒரு தீபம் ஏற்றி விடுவார்கள். இந்தத் தீபம் பனியிலும் அணையாமல் கோடை காலத்தில் கோயிலைத்திறக்கும் போது எரிந்து கொண்டே இருக்குமாம். இந்தத் தீபத்தை விநாயகர் தீபம் ( கணேஷ் தீபா) என்கிறார்கள். எல்லோரும் விநாயகரை நினைத்து வணங்குவார்களாம் விநாயகரின் திருவிளையாடல்கள் சொல்லில் அடங்குமா? சொல்லி முடியுமா?

**இலங்கையிலும் விநாயகர் தீபம்.**

பறாளாயில் பள்ளி கொண்டுள்ள ஈசுர விநாயகர் ஆலயத்திலும் மனுக்கட்டிய நாள் தொடக்கம் இப்போதும் அணையாது ஒரு விளக்கு எரிந்து கொண்டே இருக்கிறது.அதாவது மாலைப் பூஜை முடிந்ததும் எண்ணெய் விட்டு எரிய விட்டு வந்தால் காலைப் பூஜைக்கு கதவு திறக்கும் போதும் எரிந்து கொண்டு இருக்கும்.இவ் விளக்கு தமிழ் மக்களின் கொடிய இருளைப் போக்க ஏற்றப்பட்ட "விநாயகர் தீபம்" என்பதை அறியத் தருகின்றேன்.

மத்தள வயிறினை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமிழடை வினை முற்படுகிரிதெனில்
முற்பட எழுதிய முதல் வோனே
அவர் திருப்பாதம் போற்றி போற்றி போற்றி
"பார் தெரியுது பறாளயான் பதி
பக்தர் குறை தீர்க்கும் சந்நிதி"

சோழியூரான்,
பிறைசூடிக் குரு.

27.03.2025 (சி-3765)

# இராசிபலன்

28.03.2025
பங்குனி 14, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 7.27 மணிவரை.

பூரட்டாதி முன்னிரவு 9.47 மணிவரை
சுபநேரம் 6.14-7.44 மணிவரை
இராகுகாலம் -10.44-12.14 மணிவரை

சந்திராஷ்டமம்.
ஆயில்யம், மகம்

**வளவன்**




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




வழிபாடு மகத்துவம் தரும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பொறுமையால் அமைதி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




சொந்த பந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




பொதுவாழ்வில் சுவாரஷ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், நிலையான வருமானத்திற்கு வழி சமைப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலாங்கும் நாள்.




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் பெருக வழியமைத்துக்கொள்ளும் நாள்.




உடன்பிறப்புக்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுபவிரயங்கள் கூடும் நாள்.

கோழை ஒருபோதும் இரக்கம் காட்டமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயலில் ஈடுபட்ட வாகனங்கள் பறிமுதல்



(தருமபுரம்)

கிளிநொச்சியில் சட்ட விரோத செயற்பாட்டில் ஈடுபட்ட ரக்ரர் மற்றும் டிப்பர் வாகனங்கள் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்தவகையில், கிளிநொச்சியில் சட்டவிரோத மண் கடத்தல், வீதி அனுமதிப் பத்திரம் அற்ற டிப்பர் வாகனங்களில் மணல் ஏற்றி சென்றமைக்காகவும், அனுமதிப் பத்திரங்கள் இருந்தும் மணல் ஏற்றி வீதியில் செல்லும் போது முறையற்ற விதத்தில் வீதியில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சென்றமை உள்ளிட்ட குற்றங்களுக்காகவும் ரக்ரர் மற்றும் டிப்பர் வாகனங்கள் வீதிப் போக்குவரத்து பொலிஸார் மற்றும் விசேட குற்றத் தடுப்பு பொலிஸாரும் இணைந்து கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8-316)

# பெருமளவான கஞ்சா பொதிகள் திக்கம் கடற்கரையில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி திக்கம் கடற்கரையில் பெருமளவான கஞ்சா பொதிகள் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளன.

யாழ்.இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலினை அடுத்து வல்வெட்டித்துறை பொலிஸாருடன் இணைந்து குறித்த பகுதியில் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போதே 70 கிலோகிராம் எடையுள்ள 33 கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-33-60)

# நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம்மீன்பிடித்துறை முகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற தமிழ் நட்டைச் சேர்ந்த மீன்பிடி விசைப்படகையும், அதிலிருந்த 11 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களைக் காங்கேசன் துறைக் கடற்படை தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முன்தினம் வவுனியாவில் இரு நாட்டு மீனவர்களும் கலந்துரையாடியிருந்தனர்.

இந்நிலையிலே தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்கும் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைதாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33-60)

# இல்மனைட் அகழ்விற்கு அனுமதி இரத்து செய்யத் தீர்மானம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - கொக்கிளாய் தொடக்கம், செம்மலை வரை மிஸ்வெஸ்ட் ஹெவி சாண்ட் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனம் இல்மனைட் அகழ்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி கோரியிருந்த நிலையில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கடுமையான எதிர்ப்பினையடுத்து இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி வழங்குவதில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஏற்கனவே கொக்கிளாயில் இல்மனைட் அகழப்பட்ட இடங்களும் குறித்த நிறுவனத்தால் சீர்செய்யப்பட வேண்டுமெனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி வழங்கமுடியாது. கொக்கிளாய் முகத்துவாரத்தில் ஏற்கனவே மக்களுக்குரிய 44 ஏக்கர் காணியில், மக்களின் அனுமதி பெறப்படாமல் இல்மனைட் அகழ்வு செய்யப்பட்டதால் அந்த இடங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அப்பகுதியில் இல்மனைட் அகழ்ந்தால், கடல் நீர் உட்புகும், கடற்றொழில் பாதிக்கப்படும், கரவலைத் தொழில் பாதிக்கப்படுமென அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இல்மனைட் அகழ்விற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்ற தீர்மானம் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் எடுக்கப்பட்டது. (6-8-299)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 77, அராலித்துறை வீதி, வட்டாரம்-10

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுலகத்திற்குப்பட்ட வட்டாரம்10 அராலித்துறை வீதியிலுள்ள இல:77 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **சுந்தரமூர்த்தி ஆலாலசுந்தரம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **செல்லப்பா மகாலிங்கம்** என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 16425 11.12.1999 ஆம் இலக்க உறுதியால் மாணிக்கம் நமசிவாயம் கைம்பெண் கனகம்மா ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது. "என்னால் 1989ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டு ஆட்சி செய்யப்பட்டு வந்தது எனவும், குறித்த அறுதி உறுதிப்பத்திரம் தொலைந்து விட்டதெனவும், தேடுதல் நடவடிக்கை எடுத்தும் குறித்த உறுதிப்பத்திரத்தைப் பெற முடியவில்லை எனவும், எனது கொள்வனவு உரித்தையும். ஆட்சியையும் சத்தியப்பத்திரம் மூலம் வெளிப்படுத்தியுள்ளதாகவும்" குறிப்பிட்டே குறித்த உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.


**விநாயகமூர்த்தி நல்வருணேந்திரராசா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.க.கணேசவேல் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2399/09.07.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லப்பா மகாலிங்கம்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **விநாயகமூர்த்தி நல்வருணேந்திரராசா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குறித்த **விநாயகமூர்த்தி நல்வருணேந்திரராசா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**
(3786)


# யாழ்.பல்கலையில் ஆரம்பமான நனோ தொழில்நுட்ப மாநாடு





(யாழ்ப்பாணம்)

தூய சக்தி மற்றும் சுகாதார பயன்பாடுகளுக்கான அதிநுட்ப 'நனோ' (நுண்ணணு தொழில் நுட்பம்) திரவியங்கள் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு - 2025 யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் சாய்முரளி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் வசந்தகுமார, மேற்கு நோர்வே பல்கலைக் கழகத்தின் [illegible] பேராசிரியர் ஜென்ஸ் கிறிஸ் [illegible] இந்தியாவின் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரவிகணேசன், வவுனியா பல்கலைக் கழகத் தின் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.அற்புதராஜா, யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வே நாட்டு உயர் கல்வி, ஆற்றல் அபிவிருத்தி இயக்குனரகத்தின் உதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தாலும், இந்திய கோயம்புத்தூர் தொழில்நுட்ப நிறுவனத்தினாலும், மேற்கு நோர்வே பல்கலைக்கழகத்தாலும் இம் மாநாடு கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக குறித்த மாநாடு இன்றும் இடம் பெறவுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பந்துர பதவி விலகல்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தவிசாளர் பந்துர திலீப விதாரண தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அதற்கான கடிதத்தை அவர் போக்குவரத்து அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் போக்குவரத்துக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய திலீப விதாரண, நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையிலான போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களின் தவிசாளர் பதவியிலிருந்து விலகிய மூன்றாவது அதிகாரி பந்துர திலீப விதாரண ஆவார்.

ஏற்கனவே, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தவிசாளராக பணியாற்றிய ருவன் விஜயமுனி மற்றும் தேசிய போக்குவரத்து சபையின் தவிசாளராக பணியாற்றிய ரமல் சிறிவர்தன ஆகியோர் முன்னர் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## வஜிரவை சந்தித்த அமெரிக்க தூதுவர்



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று சிறிகொத்தாவில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்கு விஜயம் செய்துள்ளார்

அங்குசென்ற அமெரிக்கத் தூதுவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அது கோரல ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார்

தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் குறித்து அவர் விரிவாக விவாதித்ததாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

### புத்தாண்டை முன்னிட்டு

## சலுகை விலையில் உணவுப்பொதி

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தகைமையுடைய பயனாளிகளுக்கு "காலத்தின் தேவைக்கான உணவுப் பொதியை" சதொச மூலம் வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அதற்கமைய 5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய "காலத்தின் தேவைக்கான உணவுப்பொதி", சலுகை விலையில் 2,500 ரூபாவிற்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்காக அஸ்வெசும திட்டத்திற்காக புதிதாக விண்ணப்பித்துள்ள 812,753 விண்ணப்பங்களில் தகைமையுடைய பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதி முதல் 13ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சதொச கூட்டுறவு நிலையங்கள் ஊடாக இந்த உணவுப் பொதியை பயனாளிகள் பெற்றுக்கொள்ள முடியும். (நி-8)

## மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கும் தூக்கமின்மை



(கொழும்பு)

இலங்கையில் 63% மாணவர்களுக்கு போதுமான தூக்கம் கிடைக்காமை கவலைகளை எழுப்புகிறது என சமூக மருத்துவ ஆலோசகர் சிராந்திகா விதானகே தெரிவித்தார்.

சுகாதார ஊக்குவிப்பு தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் குறித்த தகவலை வெளியிட்ட அவர், தூக்கம் ஆரோக்கியத்திற்கு முக்கியமானது என்றும், 16 - 17 வயதுடைய பாடசாலை மாணவர்களில் 8.2%மானோர், 4 மணிநேரம் அல்லது அதற்கும் குறைவான தூக்க நேரத்தைக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (நி-8)


### பகிரங்க ஏலவிற்பனை-2025
### பருத்தித்துறை பிரதேச சபை-புலோலி

பருத்தித்துறை பிரதேச சபையின் ஆணைவிழுந்தான் வாகனத் தரிப்பிடத்தில் பகிரங்க ஏலத்தில் பொருட்கள் **2025.04.09** ஆம் திகதி **மு.ப 10.00 - மு.ப 11.00 மணி** வரை விற்பனை செய்யப்படவுள்ளது. பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் ஏலவிற்பனை நடைபெறும் நாள் **மு.ப9.00 மணி** முதல் **பி.ப 10.00 மணி** வரை பொருட்களை பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருட்களை பெறுகின்றவர்கள் உடனடியாக முற்பணத்தினைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று அன்றைய தினம் **பி.ப 3.00** மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Puncher Four Hole | 1 |
| 2 | Stapler | 5 |
| 3 | Puncher | 4 |
| 4 | Mammotti | 4 |
| 5 | Tack | 2 |
| 6 | Wild knife | 4 |
| 7 | Water Tank | 3 |
| 8 | Stand Fan | 1 |
| 9 | Computer Chair | 1 |
| 10 | Office Chair | 1 |

அ.விநோராஜ்,
செயலாளர்.

(c-2556)



# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Pathway Near Ward 06 To A&E Building And Roof Work, Painting and Shed for Ambulance Pathway at A&E. | 1500.00 | 154,000.00 | 91 | 7.74 Mn | C7 |
| 2. | Renovation of Ward No 01, 03, 16B, 21, 20 and Rehabilitation Building and A&C, Eye Clinic | 1500.00 | 94,000.00 | 91 | 4.7 Mn | C8 |
| 3. | Renovation Work of Surgical Ward | 5000.00 | 991,000.00 | 91 | 49.55 Mn | C5 |
| 4. | Construction of Shed for Vehicle Park at BCAS Land & Bike Shed Near The Police Hut | 1500.00 | 230,000.00 | 91 | 8.5 Mn | C7 |
| 5. | Ceiling & Modification Work at New Clinic & Pharmacy | 1500.00 | 60,000.00 | 91 | 3 Mn | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 01.04.2025 up to 16.04.2025 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 17.04.2025, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
28.03.2025

(C-2557)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## நடுவானில் மோதிக்கொண்ட போர் விமானங்கள்




(பாரிஸ்)
பிரான்ஸ் விமானப் படையின் 2 ஜெட் ரக போர் விமானங்கள் நேற்று முன் தினம் பயிற்சியின்போது நடுவானில் மோதி விபத்துக்குள்ளாகின. இதுதொடர்பாக வீடியோ வெளியாகி உள்ளது.

கிழக்கு பிரான்ஸின் ஹாட் - மார்னேவில் உள்ள சேயிண்ட் - டிசியர் அருகே நேற்று முன்தினம் பயிற்சியின் போது பிரான்ஸ் விமானப்படை ஆல்பா ஜெட் விமானங்கள் இரண்டு நடுவானில் மோதிக்கொண்டன.

மோதலுக்கு முன்னர் இரண்டு விமானிகளும் பரசூட்டுடன் கீழே குதித்து உயிர்தப்பினர். அவர்கள் நலமுடன் இருப்பதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

விபத்துக்கு பின் விமானங்கள் இரண்டும் விழுந்து வெடித்ததில் அருகில் இருந்த தொழிற்சாலையிலும் தீவிபத்து ஏற்பட்டது. எனினும் பெரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (நி-8)



## பூமிக்கு அடியில் ஏ...
## காணொளி வெளி...

### பதற்றத்தில் உலக நாடுகள்

(டெஹ்ரான்)
ஈரானில் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டு... மிகப்பெரிய சுரங்கத்தில், நூற்றுக்கணக்கான நவீன... ஏவுகணைகளை ஈரான் இராணுவம் சேமி... வைத்துள்ளது. இந்த "ஏவுகணை நகரம்" தொடர்ப... காணொளியை ஈரான் அரசு வெளியிட்டுள்ளது.



இந்தக் காணொளி அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட ஈரானின் எதிரிகளாக கருதப்படும் நாடுகளுக்கு ஈரான் அரசு வெளியிட்ட எச்சரிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே இது போன்ற

ஏவுகை... கடற்ப... காணெ... ருந்த... அரசு ... பலத்... விநா...

## இந்தியா - சீனா அதிகாரிகள் பீஜிங்கில் பேச்சுவார்த்தை

(பீஜிங்)
டில்லியில் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ள 24ஆவது இந்திய - சீன சிறப்புப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகளை இணைந்து மேற்கொள்ள இரு நாடுகளும் கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - சீனா எல்லை விவகாரங்களுக்கான ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புப் பணிக்குழு கட்டமைப்பின்கீழ் சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இப் பேச்சுவார்த்தையில் இந்தியக் குழுவுக்கு கிழக்கு ஆசிய நாடுகளுக்கான வெளியுறவு அமைச்சகத்தின் இணைச் செயலா கௌரங்கலால் தாஸ், சீன குழுவுக்கு அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் எல்லை மற்றும் கடல்சார் விவகாரத் துறையின் இயக்குநர் ஜெனரல் ஹாங் லியாங் தலைமை தாங்கினார்.

இதன்போது இருதரப்பு உறவின் சுமூக வளர்ச்சிக்கு எல்லையில் அமைதி மிகவும் முக்கியமாகும். இந்த நோக்கத்திலான ராஜீய மற்றும் இராணுவ வழிகளை வலுப்படுத்த இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

இதன்தொடர்ச்சியாக, புது டில்லியில் நிகழாண்டு பிற்பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள 24 ஆவது இந்திய - சீன சிறப்புப் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தைக்கான முன்னேற்பாடுகளை இணைந்து மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

எல்லை தாண்டிய நதிகள், கைலாஷ் - மானசரோவார் யாத்திரை உட்பட எல்லை தாண்டிய ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றங்களை மீண்டும் விரைவாகத் தொடங்குவது குறித்தும் பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டது.

கிழக்கு லடாக் மோதலால் கடந்த சில ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட இருதரப்பு உறவுகளை மீட்டெடுக்கும் நோக்கில் 5 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆண்டு டிசம்பரில், பீஜிங்கில் நடைபெற்ற 23ஆவது இந்திய-சீன சிறப்புப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்த நடவடிக்கைகளையும் இரு தரப்பும் ஆய்வு செய்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.



இப்பேச்சுவார்த்தைக்கு முன்னதாக, ரஷ்யாவில் கடந்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெற்ற "பிரிக்ஸ்" மாநாட்டுக்கு இடையே பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் சந்தித்தனர். இதையடுத்து, பிரேஸில் ஜி20 உச்சிமாநாட்டுக்கு இடையே இந்தியா, சீன வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேசினர்.

இதற்கிடையே, டெப்சாங், டெம்சோக் ஆகிய எல்லைப் பகுதிகளில் இரு நாட்டுப் படைகளும் விலக்கிக் கொள்ளப்பட்டமை இருதரப்பு உறவில் முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஹமாஸுக்கு...
## காசாவில் பே...


(காசா)
காசாவில் வசிக்கும் மக்களில் ஒரு பகுதியினர் போரை நிறுத்தக் கோரி ஹமாஸ் அமைப்புக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை என்பது பல தசாப்தங்களாக நீடித்து வருகிறது. இந்த நிலையில், காசாப் பகுதியை ஆளும் ஹமாஸ் அமைப்பினர் ஒக்டோபர், 2023இல் இஸ்ரேல் மீது நடத்திய திடீர் தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டதுடன், 252 பேர் பணயக் கைதிகளாகவும் பிடித்துச் செல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது.

15 மாதங்களாக போர் நடைபெற்ற நிலையில், இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு, இரு நாடுகளும் பணயக்கைதி

களை ... பணயக்... ஆயுதக்... நிலையி... மீட்கப்...

இத...
2ஆம் ... வில்லை... களை உ...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணை நகரம் ......... ளியிட்டது ஈரான்!

## கள்

**ப்பட்டுள்ள நவீன ரக சேமித்து தொடர்பான ளது.**



ஏவுகணை நகரம் மற்றும் கடற்படைச் சுரங்கம் தொடர்பான காணொளியை ஈரான் வெளியிட்டிருந்தது. இந்நிலையில், ஈரான் அரசு தற்போது தங்கள் இராணுவ பலத்தை வெளிக்காட்டும் 85 விநாடிகள் கொண்ட காணொளியை வெளியிட்டுள்ளது.

மேலும், அடுத்த 2 ஆண்டுகளுக்கு, வாரத்திற்கு ஒரு ஏவுகணை நகரை உலகிற்கு அறிமுகப்படுத்துவோம் என ஈரான் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர்ச் சூழலுக்கு மத்தியில், ஈரான் அரசு வெளியிட்டுள்ள இந்தக் காணொளியானது மேலும் பதற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

# AI தற்கொலைத் தாக்குதல் ட்ரோன்களை பார்வையிட்ட கிம்

(பியாங்யாங்)

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய தற்கொலைத் தாக்குதல் ட்ரோன்களின் சோதனையை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மேற்பார்வையிட்டார்.

நிலத்திலும் கடலிலும் பல்வேறு தந்திரோபாய இலக்குகள் மற்றும் எதிரிகளின் செயற்பாடுகளைக் கண்டறியும் திறன் கொண்ட புதிய மேம்படுத்தப்பட்ட உளவு ட்ரோன்களை கிம் ஆய்வு செய்ததாக வடகொரியாவின் அரச செய்தி நிறுவனமான KCNA தெரிவித்துள்ளது.

"ஆயுதப் படைகளை நவீனமயமாக்குவதில் ஆளில்லா உபகரணங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும்" என்று மேற்பார்வையின் போது வடகொரியத் தலைவர் தெரிவித்தார்.

அணு ஆயுதம் ஏந்திய வடகொரியா, முதன்முறையாக வான்வழித் தாக்குதலை முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் விமானத்தையும் அதிகாரபூர்வமாக வெளியிட்ட தருணம் இதுவாகும்.

இது அதன் பழைமையான வான் பாதுகாப்பு அமைப்புகளை மேம்படுத்தக்கூடிய திறன் கொண்டது.

நான்கு எஞ்சின்கள் மற்றும் உடற்பகுதியில் பொருத்தப்பட்ட ரேடார் குவிமாடம் கொண்ட ஒரு பெரிய விமானத்தின் கதவை நோக்கி கிம் படிகளில் ஏறி, குறைந்த உயரத்தில் விமானத்தைப் பார்ப்பதை அரசு ஊடகங்கள் வெளியிட்ட புகைப்படங்கள் காட்டுகின்றன. வணிக செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி, வடகொரியா, ரஷ்ய தயாரிப்பான Il-76 சரக்கு விமானத்தை முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் பணிக்காக மாற்றுவதாக ஆய்வாளர்கள் முன்னர் தெரிவித்திருந்தனர்.

அத்தகைய விமானம் வடகொரியாவின் நில அடிப்படையிலான ரேடார் அமைப்புகளை அதிகரிக்க உதவும், அவை சில நேரங்களில் தீபகற்பத்தின் மலைப்பாங்கான நிலப்பரப்பால் வரையறுக்கப்படுகின்றன என்று லண்டனின் சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனம் கடந்த செப்ரெம்பரில் ஒரு அறிக்கையில் கூறியிருந்தது. (நி-8)

# க்கு எதிராக ல் போராட்டம்


களை பரிமாறிக் கொண்டன. பணயக்கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதனிடையே, போர் நிறுத்தத்தின் 2ஆம் கட்டம் அமுல்படுத்தப்படவில்லை. எஞ்சிய பணயக்கைதிகளை உடனடியாக ஒப்படைக்கும்படி இஸ்ரேலும், காசாவில் இருந்து இஸ்ரேலை வெளியேறும் படி ஹமாஸும் வலியுறுத்தியதால் 2ஆம் கட்ட போர் நிறுத்தம் தோல்வியடைந்தது.

இதையடுத்து, காசா முனை மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளது. அதேவேளை, காசாவில் இருந்தும் இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரேலிலிருந்து சிறைபிடிக்கப்பட்டுள்ள மக்களை பணயக்கைதிகளாகப் பார்க்க வேண்டிய அபாய நிலை உருவாகக்கூடும் என இஸ்ரேல் அரசுக்கு ஹமாஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.








இதற்கிடையே, காசாவில் வசிக்கும் மக்களில் ஒரு பகுதியினர் ஹமாஸ் அமைப்புக்கு எதிராக திரும்பி உள்ளனர். வடக்கு காசாவின் பல்வேறு பகுதிகளில், "காசாவை விட்டு ஹமாஸ் அமைப்பினர் வெளியேற வேண்டும்" என வலுவான கோரிக்கையை வைத்து மக்கள் போராடி வருகின்றனர். "போரை நிறுத்து", "போரை முடிவுக்குக் கொண்டு வா", "நாங்கள் எங்கள் உயிரைக் கொடுக்க விரும்பவில்லை", "எங்கள் குழந்தைகளின் இரத்தம் மலிவானது அல்ல", "ஹமாஸே வெளியேறு" என்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் வைத்து அவர்கள் கோஷங்கள் எழுப்பி வருகின்றனர்.

17 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் இந்தப் போரில், காசாவில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியர்களின் 2025 சம்பள அதிகரிப்பு 02



அன்பு ஜவஹர்ஷா

3.8.4 மேற்படி ஒவ்வொரு சேவை வகுதியில் ஒவ்வொரு பதவிக்கும் / வகுப்பிற்கு / தரத்திற்கு உரியதாகக் கணக்கிடப்பட்ட செலுத்தப்படாத தொகை மற்றும் செலுத்தப்படும் தொகை இச் சுற்றறிக்கையின் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ளது.

3.9 2025 மற்றும் 2026 ஆண்டுகளில் உழைத்துப் பெற்றுக்கொள்ளும் வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்யும் போது. இச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன்படி உத்தியோகத்தருக்கு உரித்தான சம்பளப் படிநிலைக்கு முழுமையான வருடாந்த சம்பள ஏற்றத்தினை வழங்கி, அடுத்துவரும் சம்பளப் படிநிலையில் அமர்த்தி. இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி அச்சம்பளப் படிநிலைக்குரியதாகச் சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும். இதன்போது. இணைப்பு I இல் 4 அல்லது இணைப்பு II இன் கீழ் 3 இன் கீழ் காட்டப்பட்டுள்ள



விடயங்கள். அவ் அவ் வருடத்திற்குரியதாக பொது 185 சம்பள அதிகரிப்புச் சான்றிதழில் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்.

3.10 முதல் நியமனத்தில் மற்றும் பதவியுயர்வின் போது செலுத்தப்படும் சம்பளம்,

3.10.1 2025.01.01 திகதி தொடக்கம் 2027.01.01 ஆம் திகதி வரை நியமனம் பெறும் உத்தியோகத்தர்களின் பொருட்டு இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்தினை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன்படி சம்பளக் கொடுப்பனவை மேற்கொள்ளல் வேண்டும்.

இதன் போது 2025.01.01 ஆம் திகதியிலிருந்து 2025.03.31 ஆம் திகதி வரையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்களின் பொருட்டு அவர்களின் நியமனத் திகதிக்குரியதாக இச்சுற்றறிக்கையின் இணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத் திருத்தத்தைத் தயாரித்து. 2025.04.01 ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

3.10.2 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2027.01.01 ஆம் திகதி வரை பதவியுயர்வு பெறும் உத்தியோகத்தர்களின் பொருட்டு தாபனக் கோவையின் VII வது அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி சம்பளத்தைத் தயாரிக்கும் போது. இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளத்தின் மீது அடிப்படையாகச் சம்பளத்தினை தயாரித்தல் வேண்டும் என்பதுடன், இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன்படி சம்பளக் கொடுப்பனவினை மேற்கொள்ளல் வேண்டும்.

இதன் போது 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையில் பதவியுயர்வு பெற்ற உத்தியோகத்தர்களின் பொருட்டு பதவியுர்வுக்குரியதாக அக்கால எல்லைக்குள் சம்பளக் கொடுப்பனவு செய்யப்படுவது. 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 மற்றும் அதற்கு இணைந்த சுற்றறிக்கைகளுக் கமைய என்பதால். அவர்களின் பொருட்டு மீண்டும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு. இச்சுற்றறிக்கையின் சம்பள அளவுத் திட்டத்தினை ஏற்புடையதாக்கிப் பதவியுயர்த்துவதற்கு உரிய சம்பள மீளமைப்பினை மேற்கொண்டு அதற்கமைய உரித்தாகும் சம்பளத்தினைக் கணக்கிட்டு இச்சுற்றறிக்கையின் இணைப்பு III இன் படி 2025.04.01 ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

பதவி உயர்வின் போது சம்பள மீளமைப்பு மாதிரியொன்றின் பொருட்டு இச்சுற்றறிக்கையின் இணைப்பு III ஐப் பார்க்கவும்.

3.11 சம்பள அளவுத்திட்டம் உச்ச நிலைக்கு வந்துள்ள உத்தியோகத்தர்களின் பொருட்டு சம்பள ஏற்றத்தினைச் செலுத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2014.07.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 (XI) இன் படி அல்லது தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் அல்லது முன்னர் இருந்த தேசிய சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் அல்லது 2019.07.08 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2019 படி அதிகபட்ச உச்சத்திற்கு அப்பால் சம்பள ஏற்றத்தினைச் செலுத்தியிருக்கலாம்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் 2025.01.01 ஆம் திகதியிலிருந்து உரித்தாக வேண்டிய சம்பளப் படிநிலையை மற்றும் சமபளத்தை தீர்மானிக்கும் பொருட்டு 2024.12.31 ஆம் திகதி கிடைக்கும் சம்பளத்திற்கு நேரொத்த புதிய சம்பள அளவுத்திட்டத்தின் சம்பள படிநிலை வரை இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய சம்பள அளவுத்திட்டத்தினை நீடித்ததன் பின்னர். மேற்படி 3.8.1. 3.8.2 மற்றும் 3.8.3 முறைமையினைப் பின்பற்றி அவ்வவ் ஆண்டுக்குரியதான சம்பளத்தினைத் தீர்மானித்தல் வேண்டும்.

3.12 சகல நடவடிக்கைகளின் பொருட்டு சம்பளத்தின் பகுதியாகக் கருதி எவரேனும் உத்தியோகத்தரொருவருக்குத் தனிப்பட்ட ரீதியாக சரி செய்யும்படிகள் செலுத்தப்படுமேயானால், அச் சரிசெய்யும் படியினை இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி சம்பளத்தினைத் தீர்மானிக்கும் போது ஏற்புடையதாக்கிக் கொள்ளலாகாது.

2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இன் 4.3 பிரிவின்படி எவரேனும் உத்தியோகத்தரொருவரின் பொருட்டு செலுத்தப்படும் சரிசெய்யும்படி அவ் ஏற்பாடுகளின்படி மேலும் செலுத்துதல் வேண்டும்.

4.2.3 சம்பளத்தில் 25% என அனுமதிக்கப்பட்டு செலுத்தப்படும் நிறுவன விசேட கொடுப்பனவு சம்பளத்தின் 20% எனச் செய்யப்படல் வேண்டும்.

4.2.4 இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 40% எனச் செலுத்தப்படும் விசேட கொடுப்பனவு. சம்பளத்தில் 22% மற்றும் ரூபா 1,250/- எனத் திருத்தம் செய்யப்படல் வேண்டும்

4.3 சம்பளத்தில் சதவீதம் / பகுதியாகச் செலுத்தப்படும் மேற்படி மாதாந்தக் கொடுப்பனவினைத் தவிர, ஏதேனும் பதவியில் / சேவையிலுள்ள உத்தியோகத்தரொருவருக்கு சம்பளத்தின் சதவீதம்/ பகுதியாகத் தற்போது ஏதேனும் கொடுப்பனவொன்று செலுத்தப்படுமேயானால். அக்கொடுப்பனவுகளின் திருத்தப்பட்ட பெறுமானங்களின் பொருட்டு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் வரை. 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளுக்கமைய. 2025.03.31 ஆம் திகதியில் இருந்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு அக் கொடுப்பனவினைச் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு அனுமதியின் பொருட்டு கோரிக்கை விடுக்கும் போது உரிய கொடுப்பனவினைச் செலுத்துவதற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்ட கடித ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**06. வாழ்க்கைச் செலவுப்படி**

2024.01.10 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2024 படி செலுத்தப்படும் வாழ்க்கைச் செலவுப் படியினைத் தொடர்ந்தும் செலுத்த வேண்டும்.

**07. ஓய்வூதியம்**

7.1 2025.01.01 ஆம் திகதியும் கடமையில்ஈடுபட்டு, இறுதியாக 2025.03.31 ஆம் திகதி அல்லது அதற்கு முந்திய திகதியின் சேவையின் பின்னர் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களின் மாதாந்த ஓய்வூதியம் இவ் சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்படும் புதிய சம்பள அளவுத்திட்டத்தின் மீது அடிப்படையாகக் கொண்டு தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்படும் ஓய்வூதியம் 2025.07.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்தப்படும். 2025.06.30 ஆம் திகதி வரையில் இவ் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டியது. 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 மற்றும் அதற்கு இணைந்த வகையிலான சுற்றறிக்கைகளின்படி தயார் செய்யப்பட்ட மாதாந்த ஓய்வூதியமாகும். அவ் உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய பணிக்கொடை இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் புதிய சம்பள அளவுத்திட்டத்தின் மீது அடிப்படையாகக் கொண்டு திருத்தம் செய்யப்படாது.

7.2 2025.04.01 ஆம் திகதி சேவையிலிருந்து அதன்பின்னர் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களுக்கு இச் சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய சம்பள அளவுத்திட்டத்தின்படி முழுமையான மாதாந்த சம்பளத்தின் மீது அடிப்படையாக ஓய்வூதியம் செலுத்தப்படும்.

7.3 ஓய்வூதியப் பணிக்கொடை - 2025.04.01 ஆம் திகதியில் கடமையில் இருந்து, இறுதியாக 2026.12.31 ஆம் திகதி அல்லது அன்றைய திகதிக்கு முன்னைய திகதியொன்றில் அல்லது சேவையின் பின்னர் ஓய்வுபெறும் உத்தியோகத்தர்களின் ஓய்வூதியப் பணிக்கொடை இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரின் சம்பளத்திற்குரியதாக அவருக்குக் கொடுப்பனவு செய்யப்படும் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடல் வேண்டும்.

7.4 மேற்படி 7.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பொருட்டு 2025.06.30 ஆம் திகதிவரை மட்டும் ஓய்வூதியத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் உரித்தாவதுடன், மேற்படி 7.2 இல் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களின் பொருட்டு ஓய்வூதியத்துடன் கீழ்வரும் கொடுப்பனவுகள் உரித்தாகாது.

i. 2022.01.13 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2022 படி ஓய்வூதியர்களின் பொருட்டு மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 5,000/- மாதாந்தக் கொடுப்பனவு.

ii. 2024.08.07 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 14/2024 படி மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 3,000/- விசேட இடைக்கால கொடுப்பனவு. III இல் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்குரியதான அவருக்கு செலுத்தப்படும் பணத்தினை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும்.

**10. பதவி/ சேவை வகைப்படுத்தல்**

10.1 அரச சேவையில் பதவிகள்/ சேவை வகைப்படுத்தல் உப அட்டவணை IV இல் காட்டப்பட்டுள்ளது.

10.2 பதவிநிலை உத்தியோகத்தர் என்பது மூன்றாம் நிலை மற்றும் சிரேஷ்ட நிலை மட்டங்களுக்கு உரித்தான பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் உரித்தாவார்கள்.

10.3 இச்சுற்றறிக்கை செயற்படுத்தப்படும் திகதிக்கு உள்ள ஏற்பாடுகளின் கீழ் பதவிநிலைத் தரத்திற்கு உள்ளடங்கிய ஏதேனும் பதவி / வகுப்பு / தரம் தொடர்ந்தும் பதவி நிலை உத்தியோகத்தராகக் கருதப்படுவர்.

11. விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புப் பணம் விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பின் பொருட்டு இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரின் சம்பளத்திற்குரியதாக அவருக்கு செலுத்தப்படும் பணத்தில் 8%மான பணத்தினை 2025.04.01 ஆம் திகதி தொடக்கம் சகல அரசாங்க உத்தியோகத்தர்களினது சம்பளத்திலிருந்தும் அறவிடப்படல் வேண்டும்.

**12. வினைத்திறன்காண் தடை**

வினைத்திறன்காண் தடையைப் பூரணப்படுத்தப்பட வேண்டிய காலம். சேவைகள் பிரமாணங்கள் /ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி மாற்றங்கள் இன்றி செயற்படும்.

**13. சம்பள ஏற்றத் திகதி**

இச்சம்பள திருத்தம் காரணமாக சம்பள ஏற்றத் திகதியில் மாற்றங்கள் ஏற்படாது.

**15. கடமை மற்றும் விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டுக்கள்**

தற்போதுள்ள புகையிரத ஆணைச் சீட்டுக்களின் உரிமை தொடர்பில் தற்போதுள்ள ஏற்பாடுகள் மாற்றமின்றி செயற்படும்.


**2025 புதிய சம்பள மாற்றத்தை விரைவாகச் செய்ய புதிய மென்பொருள்**

**அரசாங்க சேவையில் சம்பளத் திருத்தம் 2025. salary. 2025 என்ற மென்பொருள் மூலம் சம்பள மீளமைப்புக் கடிதங்களைத் தயாரிக்கும் வகையில் 02/2025 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக் கடித மூலம் இரண்டு பக்கங்கள் கொண்ட அறிவுறுத்தல் 2025.03.26ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, முல்லை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக சந்திரசேன



(தருமபுரம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராக ஜெ.ஏ.சந்திரசேன தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்.

இரணைமடு சந்தியிலுள்ள அலுவலகத்தில் தனது கடமைகளை சர்வமத வழிபாட்டுடன் பொறுப்பேற்றார்.

ஏற்கனவே கடமையாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமந்த.டீ.சில்வா பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜெ.ஏ சந்திரசேன கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட நிலையில் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் 30 மோட்டார் சைக்கிள்கள், 4 மோட்டார் வாகனங்கள், 2 படகு இயந்திரங்கள், 4 துவிச்சக்கர வண்டிகள், காஸ் சிலிண்டர் மற்றும் Burner என்பன ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# சட்டவிரோத பீடி இலைகள் முருங்கன் பகுதியில் மீட்பு

## இருவர் கைது



(மன்னார்)

மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக குருநாகல் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி பீடி இலை மூடைகளுடன் நேற்று முன்தினம் இரவு மன்னார் முருங்கன் பகுதியில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி பீடி இலை மூடைகளை வாகனமொன்றில் ஏற்றி மன்னாரில் இருந்து குருநாகலுக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுடன் இணைந்து முருங்கன் பகுதியில் குறித்த வாகனம் சோதனை செய்யப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த வாகனத்தில் 36 பீடி இலை மூடைகள் பொதி செய்யப்பட்டு ஆயிரத்து 115 கிலோ கிராம் கொண்டு செல்லப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் போது குறித்த வாகனத்தில் பயணம் செய்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் இந்தியாவில் இருந்து கடல் வழியாக மன்னார் பகுதிக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டு பின்னர் மன்னாரில் இருந்து குருநாகல் பகுதிக்கு கொண்டு செல்லப்பட இருந்ததாக தெரியவந்தது.


கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 31 மற்றும் 29 வயதுடைய மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகள் மற்றும் அவர்கள் கொண்டு செல்லப்பட்ட பார வூர்தியுடன் சந்தேக நபர்களை மேலதிக விசாரணைக்காக முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# யாழிலிருந்து கிளிநொச்சிக்கு பயணித்த கப்ரக வாகனத்தில்

## ❖ 20 கிலோ கஞ்சா மீட்பு
## ❖ சந்தேக நபரொருவர் கைது



(தருமபுரம்)

யாழிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கப்ரக வாகனத்தில் கொண்டுவரப்பட்ட 20 கிலோ 175 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று ஆனையிறவு பகுதியில் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்த வேளை குறித்த கைது நடவடிக்கைச் சம்பவம் இடம்பெற்றது.

கைதான சந்தேக நபர் கிழக்கு மாகாண சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். இந்நிலையில் அந்நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (6-8-316)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 280 | 250 | 300-400 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400-500 | 450 |
| தக்காளி | 200 | 140 | 200 | 140-150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 200-230 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 250 | 400 |
| கரட் | 550 | 600-750 | 800 | 700 | 800 |
| பூசணி | 140 | 150 | 150 | 120-150 | 200 |
| புடோல் | 150 | 180 | 150-200 | 180 | 250 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 60-80 | 150 |
| சின்ன வெங்காயம் | 180 | 100-300 | 300 | 50-250 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 145 | 160 |
| பாகற்காய் | 350 | 500 | 500 | 500-600 | 500 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 260 | 200 | 150 | 250 |
| பயற்றங்காய் | 200 | 220 | 300 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 200 | 250 | 180 | 300 |
| கறிமிளகாய் | 800 | 500 | 450 | 500-600 | 800 |
| முருங்கைக்காய் | 1600 | 2500 | 2000 | 2000 | 2800 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 250-400 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 250 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 100 | 120 | 150 | 60-80 | 150 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 100-150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250-300 | 150 | 150-240 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 450 | 500 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 120 | 300 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 120 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 60 | 100 | 200 |

# வீதியில் கட்டாக்காலி மாடுகள் நிற்குமிடத்து ரூ.10 ஆயிரம் தண்டம்

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கூட்டத்தில் தீர்மானம்

(நெளுக்குளம்)

கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் இ.விஜயகுமார் தலைமையில் ஆரம்பமாகிய குறித்த கலந்துரையாடலில் உதவிப் பிரதேச செயலாளர் கி.டென்சியா, பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஜெயந்தன், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு அரச கால்நடை வைத்தியர் எஸ்.நிகேதினி, கமநல சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், கால்நடை கூட்டுறவு சங்கத்தினர், கால்நடை வளர்ப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

குறித்த கலந்துரையாடலில் மாடுகளுக்கான தோடு குற்றுதல், கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தல், மேய்ச்சல் தரை இன்மை, கால்நடை மருத்துவம், கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களைக் கட்டுப்படுத்தல், கால்நடைகள் களவாடப்படுதலை இல்லாதொழித்தல், புதிய இன மாடுகளை அறிமுகப்படுத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு சில தீர்வுகளும் வழங்கப்பட்டிருந்தது.

அத்தோடு கட்டாக்காலி மாடுகள் வீதியில் நிற்குமிடத்து 10,000 ரூபாய் தண்டப்பணமும் அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. (6-8-299)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலகமும், தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலைஞர் ஒன்று கூடலும், ஆற்றுகை நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சர்மிளா [illegible] தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்: சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 733





சிலசமயம் நம் மனதின் அந்தரங்கம் நமக்கே தெரியாது. புறம்பான காரணங்களினால் மனம் பிரமையில் ஆழ்ந்திருக்கும். பிரமை நீங்கியதும் உண்மை மனம் தெரிய வரும்"

"சரி பொறுத்திருந்து பார்ப்பாய், அப்படியும் என் மனதில் மாறுதல் ஒன்றும் ஏற்படாவிட்டால் உன்னிடம் வைத்த ஆசையை நான் போக்கிக் கொள்ள முயல்வேன்"

"அது முடியுமா?"

"முயன்றால் முடியும். கடவுளிடம் மனதைச் செலுத்தினால் முடியும். நம் பெரியோர் பகவானிடம் பக்தி செலுத்தித்தான் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள்"

"அமுதா! நீ என்னிடம் வைத்திருக்கும் அன்பு உண்மையான அன்பு என்று எனக்குத் தோன்றவில்லை." "ஏன் அப்படிச் சொல்கிறாய்? உண்மை அன்பின் அடையாளம் என்ன?"

"என்னிடம் உனக்கு உண்மையான அன்பு இருந்தால் நான் உன்னை மறுதளித்ததும் என்னைக் கொன்று விட வேண்டும் என்று உனக்குத் தோன்றும். உனக்குப் பதிலாக நான் வேறு யாரிடமாவது அன்பு வைப்பதாகத் தெரிந்தால் அவரையும் கொன்றுவிட வேண்டுமென்று நீ கொதித்து எழுவாய்."

"பூங்குழலி! நான் கூறியது தெய்வீகமான, ஸத்வ குணத்தைச் சேர்ந்த அன்பு. நீ சொல்வது அசுர குணத்துக்குரிய ஆசை. பைசாச குணத்துக்குரியது என்று சொல்லலாம்"

"தெய்வீகத்தையும் நான் அறியேன் பைசாச இயல்பையும் நான் அறியேன். மனித இயற்கைதான் தெரியும். அன்பு காரணமாக இன்பம் உண்டாக வேண்டும். அதற்குப் பதிலாகத் துன்பம் உண்டானால் எதற்காக அதைச் சகித்திருப்பது? நாம் ஒருவரிடம் அன்பு செய்ய, அவர் பதிலுக்கு நம்மிடம் அன்பு செய்யாமல் துரோகம் செய்தால் எதற்காக நாம் பொறுத்திருக்க வேண்டும்? பழிவாங்குவது தானே மனித இயல்பு?"

"இல்லை, பூங்குழலி! பழிவாங்குவது மனித இயல்பு அல்ல, அது ராட்சஸ இயல்பு. ஒருவரிடம் நாம் அன்பு வைத்திருப்பது உண்மையானால் அவருடைய சந்தோஷம் நமக்கும் சந்தோஷம் தர வேண்டும். அவர் நம்மை நிராகரிப்பது முதலில் கொஞ்சம் வேதனையாயிருந்தாலும் பொறுத்துக்கொண்டு பதிலுக்கு நன்மையே செய்தோமானால் பின்னால் நமக்கு ஏற்படும் இன்பம், ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பெருகியிருக்கும்"

"நீ சொல்வது மனித இயல்பேயல்ல. மனிதர்களால் ஆகக் கூடிய காரியமும் அல்ல. வந்தியத்தேவனுடன் வைத்தியர் மகன் ஒருவன் வந்தான். அவன் என்னைப் பார்த்ததும் ஆசை கொண்டான். அது நிறைவேறாது என்று அறிந்ததும், அவனுடைய ஆசைக்கு குறுக்கே நிற்பதாக அவன் எண்ணி வந்தியத்தேவனைப் பழுவேட்டரையர் ஆட்களிடம் காட்டிக் கொடுக்க முயன்றான். என்னையும் அவன் கொன்றுவிட முயன்றிருப்பான்."

"அப்படியானால் அவன் மனித குலத்தைச் சேர்ந்தவன் அல்ல. கொடிய அசுர குலத்தைச் சேர்ந்தவன்." "அதோ கொடும்பாளூர் இளவரசி நிற்கிறாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நாவிதனின் பேராசை

(நேற்றைய தொடர்ச்சி)

அதேவேளை நாவிதன் உங்களைக் காண வந்திருக்கிறான் என்று அவன் மனைவி அழைத்தாள். கனவு உண்மையாகும் என்று நான் நினைத்தது முட்டாள் தனமல்லவா? அது ஒரு நாளும் உண்மையாகாது, என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

முடிதிருத்திக்கொள்வதற்காக நாவிதனின் முன்பு மணிபத்திரன் அமர்ந்து கொண்டான். மறுபடியும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. மணிபத்திரன் எழுந்து கதவைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! ஒரு துறவி மௌனமாகப் பொருள் பொதிந்த பார்வையோடு அங்கு நின்றிருந்தார். மணிபத்ரன் திக்பிரமை பிடித்தவனாக, ஒரு குச்சியைக் கையிலெடுத்து அந்தத் துறவியின் தலையில் தொட்டான். உடனே அவன் எதிரில் தங்க நாணயங்கள் குவியலாகத் தோன்றின. இதைக் கண்டு மணிபத்திரன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அதிகளவு தங்க நாணயங்களை நாவிதனுக்கும் கொடுத்தான்.



பின்னர், நட[illegible] வற்றை யாரிடமும் கூற வேண்டாம் என்று அறிவுரை கூறி நாவிதனை அனுப்பி வைத்தான் மணிபத்திரன். அந்த நாவிதன் ஒரு பேராசை பிடித்தவன் மட்டுமல்லன் முட்டாளும் கூட அப்படியானால், துறவிகளின் தலையில் குச்சியால் அடித்ததால் அவர்கள் தங்க நாணயங்களாக மாறிவிடுவார்கள், இல்லையா? பணக்காரனாவது எப்படி என்று இப்போது எனக்குத் தெரிந்து விட்டது. தினம் தினம் சவரம், முடி திருத்துவது போன்றவற்றைச் செய்து ஒன்றிரண்டு காசுகளைப் பெறுவது எனக்கும் அலுத்து விட்டது. விரைவில் நானும் செல்வனாக வேண்டும், என்று தனக்குள் எண்ணிக் கொண்டான். மணிபத்திரன் கொடுத்த காசுகளைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து அகன்றான்.

ஒரு மடாலயத்திற்குச் சென்று அங்குள்ள சில துறவிகளைத் தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தான். அந்தத் துறவிகள் அவனுடைய வீட்டிற்குள் வந்தவுடன் நாவிதன் ஒரு குச்சியை எடுத்து அவர்கள் தலையில் அடிக்க ஆரம்பித்தான். பரிதாபமான அந்தத் துறவிகள் திகைத்துப் போய் விட்டனர் அவர்களுள் ஒரு துறவி, நாவிதனின் வீட்டிலிருந்து தப்பித்து வெளியே வந்தார். சிப்பாய்களை உதவிக்கு அழைத்தார். சிப்பாய்கள் நாவிதனைக் கைது செய்து நீதிபதி முன் அழைத்துச் சென்றனர். ஏன் அந்தத் துறவி களை நீ குச்சியால் அடித்தாய்? என்று நீதிபதி நாவிதனைக் கேட்டார். "மணிபத்திரன் ஒரு துறவியை அடித்ததும் அவர் பொற்குவியலாக மாறினாரே? " என்று நாவிதன் விடையளித்தான்.

நீதிபதி மணிபத்திரனை அங்கு வரவழைத்தார். நாவிதன் சொல்வது உண்மையா என்று கேட்டார். மணிபத்திரன் முழுக்கதையையும் நீதிபதிக்கு விவரமாகக் கூறினான். முழுக் கதையையும் கேட்ட நீதிபதி, நாவிதன் பேராசையோடு, நேர்மையற்ற முறையிலும் நடந்து கொண்டதைப் புரிந்து கொண்டார். முட்டாள் நாவிதனுக்குத் தகுந்த தண்டனையை வழங்கினார்.

நீதி : பேராசையும் நேர்மையற்ற குணமும் பெருந்துன்பத்தை விளைவிக்கும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தின் எல்லைகளை விரிவடையச் செய்து, எதிரிகளையும் நண்பர்களாக மாற்றுவோம்.

~ பாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்னும் பலத்த அவமானங்களை சந்திக்க நேரிடும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இரா.சம்பந்தர் திட்டமிட்டு உடைக்கின்றார். கூட்டமைப்பை உடைப்பது தமிழ் மக்களின் அரசியலைப் பாதிக்கும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்த எவரும் எழுந்து நின்று கூறவில்லை.

அவ்வாறு கூறியிருந்தாலும் அத்தகையவர்களை மௌனிகளாக்க தமிழரசுக் கட்சிக்குள் ஒரு கூட்டம் இருந்தது.

இப்போது அந்தக் கட்சி உடைந்து போயிற்று. கட்சியில் இருக்கக்கூடிய ஒரு சிலர் இன்னமும் தங்கள் கட்சியை உடைப்பதற்குச் சதிவேலை செய்கிறார்களேயன்றி, அந்தக் கட்சியை மீட்டெடுத்து தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக்குவோம் என்று நினைக்கவில்லை.

ஒரு காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் தங்களின் சொத்தாக நினைத்தனர். பதவி, கட்சி உறுப்புரிமை, மத்திய குழுவில் அங்கத்துவம் என்ற எந்தச் சிந்தனையும் இல்லாமல், கட்சிக்காக தங்கள் உயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருந்தனர்.

கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் சுகவீனமுற்றிருந்தாலும் தலைமைக்கு உரிய மதிப்பைக் கொடுத்து, அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் தமிழரசுக் கட்சியைக் கட்டிக் காத்தனர்.

ஆனால், என்று தமிழரசுக் கட்சி இரா.சம்பந்தரின் கைக்குப் போனதோ அன்று தொட்ட நாசம்.

மாவை சேனாதிராசா போன்றவர்கள் பாராளுமன்றப் பதவிக்காக சம்பந்தரை எதிர்க்கத் திராணியற்று நின்றனர்.

ஈற்றில் தமிழரசுக் கட்சி மாவை சேனாதிராஜாவுக்கு மாரகமாயிற்று.

என்ன செய்வது வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அத்தேர்தலை எதிர்கொண்டதால், தமிழ் மக்கள் எழுச்சி கொண்டு வாக்களித்தனர்.

இதில் அங்கவீனமுற்றவர்கள் நடந்தும் தவழ்ந்தும் சென்று வாக்களித்ததைப் பார்த்த போது நெஞ்சம் நெகிழ்ந்துபோனது.

ஆனால் குறித்த வடக்கு மாகாண சபை எங்ஙனம் நடத்தப்பட்டது என்பதை உலகம் நன்கு அறியும்.

அன்று வடக்கு மாகாண சபையை சிறப்பாக வழிப்படுத்துகின்ற பொறுப்பை அவைத் தலைவர் கொண்டிருந்தார்.

எனினும் அவருக்கு முதலமைச்சர் பதவியில் இலக்கு வந்தபோது இரவோடு இரவாக ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்று நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளுநரிடம் கையளித்தார்.

கூடவே மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எஸ்.தவராசாவும் உடன் சென்றிருந்தார் என்றால், தமிழரசுக் கட்சி தனக்குத்தானே வினை வைத்துக் கொண்டது என்பது தெரிகிறதல்லவா.

இதன்விளைவைத்தான் கடந்த 25 ஆம் திகதி யாழ்ப்பாண செயலகத்தில் அவைத் தலைவர் அனுபவித்துக் கொண்டார்.

ஆக, இனியேனும் தமிழரசுக் கட்சியின் ஒற்றுமை பற்றி சிந்திக்காவிட்டால், இன்னும் அந்தக் கட்சி பலத்த அவமானங்களைச் சந்திக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

# பிரித்தானியாவின் புதிய அரசாங்கம் மொக்குத்தனமாக செயற்படுகின்றது

### பயணத்தடை விதித்த பிரிட்டனை கடுமையாக சாடுகிறார் கருணா அம்மான்

*(கல்குடா)*

பிரித்தானிய அரசாங்கம் போர்க்குற்றங்களுக்காக கருணா அம்மான் உள்ளிட்ட ஐவருக்குப் பயணத்தடை விதித்துள்ள நிலையில் பிரித்தானிய அரசாங்கத்தை மொக்கு அரசாங்கம் என கருணா அம்மான் விமர்சித்துள்ளார்.

கல்குடாவில் நடைபெற்ற கூட்டத்தின்போது இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர், பிரித்தானிய சிறைச்சாலையில் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது கண்டுபிடிக்காத குற்றச்சாட்டை இப்போது தான் பிரித்தானிய அரசாங்கம் கண்டுபிடித்துள்ளதா என கேள்வியெழுப்பினார்.

மேலும் பிரிட்டிஸ் அரசாங்கத்தினால் நான் 2006ம் ஆண்டு கைது செய்யப்பட்டு அங்கு 8 மாதங்கள் சிறைவைக்கப்பட்டிருந்தேன். இருந்தேன். அப்போது கண்டுபிடிக்காத குற்றைச்சாட்டை இப்போது தான் பிரிட்டன் அரசாங்கம் கண்டுபிடித்துள்ளது. எப்படியானதொரு மொக்கு அரசாங்கம் அது.

அரச மரியாதையுடன் கட்டுநாயக்க விமான நிலையம்வரை என்னை பாதுகாப்புடன் கொண்டு வந்தார்கள். அப்படிபட்ட பிரிட்டிஸ் அரசாங்கத்துக்கு இப்பதான் விளங்கியிருக்கு கருணா அம்மான் பிழை விட்டுள்ளார் என்று.

ஆகவே இது எல்லாம் கிழக்கு தமிழர்களுடைய இருப்பை சூறையாடுவதற்கான நடவடிக்கை. இதற்காக புலம் பெயர்ந்து வாழுகின்ற சில அருவருடிகள் ஒத்துழைத்து வருகின்றனர் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். *(ம-7)*

## பொலிஸ் திணைக்களத்தினுள்ளும் ஊடுருவியுள்ள குற்றக் கும்பல்கள்

*(கொழும்பு)*

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்கள் பொலிஸ் திணைக்களத்தினுள் ஊடுருவியுள்ளதாகவும் சில அதிகாரிகள் அந்தக் கும்பல்களின் செல்வாக்கின் கீழ் இருப்பதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவிசெனவிரத்ன தெரிவித்தார்.

குற்றங்களைத் தீர்ப்பதில் சிறந்த பங்களிப்பைச் செய்த அதிகாரிகளைக் கௌரவிக்கும் வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் மட்டுமே அமைதியை நிலைநாட்ட முடியும்.

இன்று அமைதியை நிலைநாட்ட முடியாததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், மற்றொன்று போதைப்பொருள். இந்த இரண்டையும் சமாளிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. அவை பல்வேறு காரணிகளால் ஏற்படுகின்றன.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற கும்பல்கள் பொலிஸ் மத்தியில் ஊடுருவியுள்ளன. சில பொலிஸ் அதிகாரிகளும் அவர்களுக்கு இணங்கிச் செயற்பட்டுள்ளனர்.

அவை தவறு நாட்டில் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவது பொலிஸாராகிய உங்கள் பொறுப்பு" என்றார். *(ம-7)*

## சூட்டுச்சம்பவங்களால் பாதுகாப்பிற்கு குந்தகமில்லை

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

இலங்கை முழுவதும் அண்மையநாட்களாக பதிவாகிவரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருணா ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"பொதுமக்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதி செய்துள்ளோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு சிறப்புத் திட்டத்தை செயற்படுத்தியுள்ளோம். இலங்கை முழுவதும் பொதுப் பாதுகாப்புக்கு எவ்வித பாதகமும் இல்லை.

பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலே தொடர்ந்து மோதல்கள் நடந்து வருகின்றன. அவை தேசிய பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. பாதுகாப்பு அமைச்சு இந்த விடயத்தில் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது." என்றும் அவர் தெரிவித்துள்ளார். *(ம-7)*

## தீவிரவாதக் குழுக்கள் வேரோடு களையப்படும்

### நளிந்த ஜயதிஸ்ஸ கூளுரை

நாட்டில் வேரூன்றியுள்ள தீவிரவாதக்குழுக்கள் களையப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

தீவிரவாதக் குழுக்கள் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் விளிப்புடன் செயற்படுகின்றனர். அமைச்சரவைக் கூட்டத்திலும் இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

புலனாய்வுத் துறையின் உதவியுடன் குறித்த குழுக்கள் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கிலும் ஒரு முஸ்லிம் தீவிரவாதக் குழுவின் செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. •

இவ்விவகாரம் தொடர்பிலும் நாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். நாட்டில் உள்ள தீவிரவாதக் குழுக்களின் செயற்பாடுகளை விரைவில் முற்றாக முடக்குவோம் என்றார். *(ம-7)*

## மண்டைதீவு வழிப்பிள்ளையாராலய பொதுச்சபைக்கூட்டம்

மண்டைதீவு வழிப் பிள்ளையார் ஆலய புனருத்தாரணம் தொடர்பிலான விசேட பொதுச் சபைக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது. *(ம-7)*

## பொற்பதி அறிவாலய ஆண்டு நிறைவு விழா

கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தின் 13ம் ஆண்டு நிறைவு விழாவும் சரஸ்வதி முன்பள்ளியின் 40ஆவது கால்கோள் விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் பொற்பதி வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் இடம் பெறவுள்ளது.

அறிவாலயத் தலைவர் வாமதேவன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)

## எவருக்கும் அஞ்சாமல் உண்மையைப் பேசும் மகர இராசி நேயர்களே!



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

**மகரம்:** எதிலும் வழக்கு போடும் மகர ராசிக்காரர்களே நீங்கள் எவருக்கும் அஞ்சாமல் உண்மையைப் பேசுபவர்கள். எல்லாரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர். இருப்பதைக் கொண்டு எளிய வாழ்வு முறையை வாழ்ந்து அமைதியுடன் இருக்க விரும்புபவர்கள். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது.

**கிரகநிலை:** இதுவரை உங்களது தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி தைரிய வீரிய ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் பாக்கிய ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் அயன சயன போக ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** தாயின் வழியில் நன்மைகள் உண்டாகும். உங்களை விட்டு விலகியிருந்த தாய் வழி உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, உங்கள் நன்மதிப்பை உயர்த்திக் கொள்வீர்கள். அதிகமான பயணங்களை மேற்கொள்ள நேரிடும். எந்த வயதினருக்கும் புதிதாக ஒரு கல்வியோ, கலையோ பயில வாய்ப்புண்டாகும். சிலருக்கு வெளியூர் சென்று படிக்கும் வாய்ப்புகளும் கிடைக்கும். செய்தொழிலில் வளர்ச்சி உண்டாகும். பழைய வாகனங்களை விற்றுவிட்டு புதிய வாகனங்களை வாங்குவீர்கள். அதே நேரம் உடல் நலத்தில் கவனமாக இருக்கவும். சரியான நேரத்தில் ஆகாரம் உட்கொண்டு, ஒவ்வாத உணவுகளைத் தவிர்த்தாலே போதும் நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். நண்பர்களிடம் கோபப்படாமல் நடந்துகொண்டு அவர்களின் உறவைத் தக்க வைத்துக் கொள்ளவும் அது தக்க சமயத்தில் உதவும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்களின் மனதில் சிலரது போக்கினால் வருத்தங்கள் ஏற்பட்டாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் செயற்படுவீர்கள். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது. சுதந்திரமாகச் சிந்தித்துத் தனித்துச் செயற்படுவீர்கள். புதிய உறவுகள் மலரும். அவர்கள் உங்கள் செயல்களுக்கு அரணாகத் திகழ்வார்கள். சிலர் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவார்கள். வருமானம் பெருகும். இதனால் புதிய சேமிப்புத் திட்டங்களிலும் ஈடுபடுவீர்கள். அதே நேரம் எவரிடமும் உங்கள் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். அனைத்து விடயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். பங்கு வர்த்தகத்தில் இலாபம் குவியும். அந்த இலாபத்தை எதிர்காலத்திற்காகச் சேமிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வீர்கள். தந்தை வழியில் சில அனுகூலங்களைக் காண்பீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள்.

தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எதிர்பாராத இடங்களிலிருந்து பணவரவு உண்டாகும். மனதில் அமைதி நிலவும். நிம்மதியாக உறங்குவீர்கள். உடல் உபாதைகள் முழுமையாகத் தீர்ந்துவிடும். குடும்பத்திலும் மருத்துவச் செலவுகள் ஏற்படாது. வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும். ஆன்மீகச் சிந்தனையுடன் வாழ்க்கையை நடத்துவீர்கள்.

உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் ஊதியம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர்வும், மனதிலிருந்த குழப்பமும் மறையும். இதனால் உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்பு பாராட்டுவார்கள். அலுவலகத்தில் சிறப்பான பயிற்சிகளைக் கற்றறிந்து வெற்றியடைவீர்கள்.

வியாபாரிகள், போட்டியாளர்களின் தடைக்கற்களைக் கடக்க சற்று போராட வேண்டியிருக்கும். கூட்டாளிகளை நம்பாமல் நீங்களே முன்னின்று செயற்பட்டால் வியாபாரத்தில் ஏற்படும் குளறுபடிகளைத் தவிர்க்கலாம். பண விடயத்திலும் உஷாராக இருக்கவும். கடினமாக உழைப்பீர்கள்.




அரசியல்வாதிகள், கட்சியின் மேலிடத்தில், கணிசமான ஆதரவைப் பெறுவீர்கள். அதேசமயம் தொண்டர்கள் உங்களிடம் சற்று பாராமுகமாகவே நடந்து கொள்வார்கள். அதனால் கோபப்படாமல் விவேகத்துடன் விட்டுக் கொடுத்து நடந்துகொண்டு, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மனங்களை வெல்லவும். சமுதாயத்திற்குப் பயன்படும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிரிகளின் இரகசியத் திட்டங்களை அம்பலப் படுத்திப் புகழடைவீர்கள்.

கலைத்துறையினருக்கு அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும். திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தாமாகவே அமையும். பொருளாதார வசதிகளில் முன்னேற்றம் ஏற்படும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

பெண்கள், குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். நன்கு யோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து சேமிப்புகளில் கவனம் செலுத்தவும். கடுமையான சொற்களை உதிர்க்காமல் நிதானமாகப் பேசவும். மாணவர்கள், படிப்பில் ஏற்படும் இடையூறுகளைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள்.

தெளிவான மனதுடன் படித்து நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். நண்பர்களும் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அதேசமயம் விளையாட்டுகளில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெற முடியாமல் போகும்.

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**திருவோணம்:** தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். வியாபார வளர்ச்சி பற்றிய சிந்தனை எழும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றமான பலன் காண்பார்கள். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கலாம்.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் குடும்பத்தினருடன் கலந்து கொள்வீர்கள். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பணவரத்து திருப்தி தரும்.

**பரிகாரம்:** பார்வதி தேவியை வழிபட்டுச் சிறப்படையுங்கள். முடிந்தவர்கள் தகுதியானவர்களிடம் தீட்சை பெற்று மந்திர ஜெபம் செய்து வரவும். அபிராமி அந்தாதியில் சில பாடல்களையாவது அன்றாடம் பாராயணம் செய்வது மிக, மிக நன்மை தரும். மேலும் ராம நாம ஜெபம் செய்வதும் நன்மையைத் தரும். "வில்வ தளத்தை" சிவனின் உச்சி குளிர அணிவித்து அர்ச்சனை செய்துவர துன்பங்கள் அனைத்தும் பறந்தோடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பிக்கப்பட்ட...

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஏழு அரசியல் கட்சியும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் பூநகரி பிரதேச சபைக்கு தங்களுடைய வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தன.

இந்நிலையில் அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஏனைய உள்ளூர் அதிகார சபைகளுக்குத் தேர்தல் நடைபெறுகின்ற திகதியான மே மாதம் ஆறாம் திகதியே பூநகரி பிரதேச சபைக்கான தேர்தலும் நடைபெறும் எனத் தெரிவித்தார். (ம-7,316)

## ஏப்ரல் 22, 23...

மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பூநகரி, மன்னாரி...

யில் வேட்பாளர்களின் கட்டுப்பணம் செலுத்தும் பணி நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது.

மூன்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் சேர்த்து மே மாதம் 06ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தமிழர்களின்...

சேகர் தெரிவித்துள்ளார்.

காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

காரைதீவு பிரதேச மக்களின் பிரச்சினைகளை நாம் மிக நன்றாக அறிந்து வைத்திருக்கின்றோம். காரைதீவு மண்ணின் தனித்துவம் தொடர்ந்து பேணப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும்.

நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்தான். ஆனால் தமிழர்கள் தமிழர்களாக வாழ வேண்டும். முஸ்லிம்கள் முஸ்லிம்களாக வாழ வேண்டும். சிங்களவர்கள் சிங்களவர்களாக வாழ வேண்டும். இதுதான் அழகு எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## அநுர அரசு...

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் மொனராகலை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சுப நேரத்தில் நாட்டை அநுரவுக்கு வழங்கிவிட்டு மக்கள் மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். வருமானம் அவ்வாறே இருக்கத்தக்க பொருட்களின் விலை தாறுமாறாக அதிகரித்து மக்கள் கஷ்டப்பட்டு வாழ்கின்றனர்.

3 வேளை உணவு உண்பது சிரமமாகிப்போயுள்ள வேளையில், மக்களுக்கு அழுத்தம் கொடுப்பதில் இந்த அரசாங்கம் சிறந்து விளங்குகின்றது. இதுவுக்கு மத்தியில் அரிசி, தேங்காய் போன்ற அத்தியாவசிய உணவு மற்றும் பானங்களின் விலைகள் அதிகரித்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது அரசாங்கமும் ஆளுந்தரப்புப் பிரதிநிதிகளும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துப்பொருட்களின்றி மருந்துப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. வைத்தியசாலையில் மருந்துப் பற்றாக்குறை பாரியதொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றன. மருந்தின்றி நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றுவது எவ்வாறு என்ற பிரச்சினை நிலவிவருகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மின்சக்தி அமைச்சரின் வீட்டின் அருகேயுள்ள பல கிராமங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இன்று இவ்வாறானதொரு நாடே காணப்படுகின்றது. நாட்டை ஆள்வதற்கான திட்டமில்லாத அரசாங்கமே ஆட்சியில் இருக்கிறது. இதன் காரணமாக நாட்டின் திருப்புமுனையை தீர்மானிக்கும் [illegible] இந்த உள்ளூராட்சி மன்றத் [illegible]

மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் தயாராக வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

## பயனுள்ள...

இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்ச்சியாக கூட்டத்திற்கு தலைமை வகித்த இளங்குமரன் எம்.பியை மட்டந்தட்டிப் பேசினார்.

நாட்டின் அபிவிருத்திக்கு 5 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அதில் ஆயிரம் மில்லியனை வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அதில் எவ்வளவு நிதியை தென்மராட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் பெற்றுத்தர முடியும் எனத் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பிய நிலையில் இறுதியாக ஐயாயிரத்திற்கு ஐந்தும் மூன்று பூச்சியங்களும் வரும்,

அதே நேரம் ஆயிரத்திற்கு ஒன்றும் மூன்று பூச்சியங்களும் வரும் இப்போதாவது நான் கேட்பது விளங்குதா என வினவியிருந்தார்.

அதேநேரம் இளங்குமரன் எம்.பி அர்ச்சுனாவை நோக்கி எனக்கு வாழைப் பழத்தை உரித்து ஊட்ட வேண்டாம் எனக்கூறியபோது குரங்கிற்குதான் வாழைப் பழம் ஊட்ட முடியும் அடுத்த கூட்டத்திற்கு வாழைப் பழத்துடன் வருகை தருகிறேன். அதுவரை பொறுமை காக்கும்படி அர்ச்சுனா எம்.பி குதர்க்கமாகப் பேசியிருந்தார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், நான் வைத்தியரே தவிர மின் பட்டியல் பதிபவன் அல்ல எனவும் கூட்டத்தில் கருத்து வெளியிட்டதுடன்,

நான் அமைச்சரிடம் ஏதும் கேள்வி கேட்டால் அமைச்சர் என்னை டேய் என்று பேசுகிறார் என்றும் அர்ச்சுனா எம்.பி தெரிவித்திருந்தார்.

அர்ச்சுனா எம்.பி இவ்வாறு கூட்டத்திற்கு பொருத்தமற்ற விடயங்களைத் தொடர்ச்சியாகப் பேசி வந்தமை [illegible] பொறுமை இழந்த தென்மராட்சியின் சமூக செயற்பாட்டாளர்கள் சிலர் கூட்டத்தைப் பயனுள்ள விதத்தில் கொண்டு நடத்துமாறு கூட்டத்தில் எழும்பி வினவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)

## புன்னாலைக்...

மத்தியில் மிக சூட்சுமமான முறையில் கஞ்சா செடி வளர்த்து வருவதாக புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்ததையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் புலனாய்வாளர்கள் கஞ்சா செடியை மீட்டதுடன், அதனைப் பயிரிட்ட குற்றச்சாட்டில் 42 வயதுடையவரை கைது செய்தனர்.

மீட்கப்பட்ட கஞ்சா செடி சுமார் 4அடி உயரம் எனவும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்டவரை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சுன்னாகப் பொலிஸார் சந்தேக நபரைத் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2025.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 5788
P 6 4 1 8 7 1
அத சம்பத P 1 8 7 1
சீட்டிழுப்பு இலக்கம் 0363
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1818
V 06 10 66 76 V
Double Chance 48808

மெகா பவர்
திகதி 27/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2136
R 05 01 14 43 79

ஜய
திகதி 2025.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 056
W 1 8 1 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4030
சீட்டிழுப்பு திகதி 27.03.2025
Z 03 13 53 74
Z
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 1097
கும்பம் 09 30 43 61 கும்பம்
97353 50

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
27.03.2025 வெற்றி வாரம் 496
M 3 6 8 4 5 7
69989
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,395,442.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2762
சீட்டிழுப்பு திகதி 2025.03.27 தினம் வியாழக்கிழமை
13 18 25 68 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,798,910.40
DLB

சனிதா
திகதி 27.03.2025 வெற்றி வாரம் 4923
24 32 40 47 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,481,215.20
57672
DLB

சசிரி
வெற்றி வாரம் 651
சீட்டிழுப்பு திகதி 27.03.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 13 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4474
சீட்டிழுப்பு திகதி 27.03.2025 தினம் வியாழக்கிழமை
18 25 46 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,819,319.60
191870
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 03 13 16 42 55
1938
27.03.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,940,686.80
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2588
சீட்டிழுப்பு திகதி : 2025.03.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,391,435.20
08 52 62 63 R
996152
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 2027

கலை, வர்த்தகம்

ஆரம்பம் : 05.04.2025 (சனி) காலை 9 மணி

DMI யாழ் நகர்

TP : 077 848 0604

(3751)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

தொழில்நுட்பப் பிரிவு
A/L 2027
ஆரம்பம் : 30.03.2025
(ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 8.30 மணி
A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு : 077 0175 346
(C-2559)

KBK கந்தர்மடம்
புதிய பிரிவு
A/L 2027 கணக்கீடு
தமிழ் ஆங்கில மொழி மூலம்
MR.BALAKAJEN SLTS
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.com(Hons) Acc.spl
ஆரம்பம்
31.03.2025 திங்கள் மாலை
தமிழ் மொழி மூலம் 4.00 மணி
ஆங்கில மொழி மூலம் 5.00 மணி
A/L 2025/ DAY / 2026
பிரிவுகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
ADMISSION OPEN
077 452 0043
(3964)



DCM - யாழ். நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2027
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் - 06.04.2025 (ஞாயிறு) 9.00 Am
நிர்வாகம் : 077 778 9815
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(C-2558)

G.C.E (A/L)
இணைந்த கணித வகுப்புக்கள்
G.C.E (A/L) இணைந்த கணித வகுப்புக்கள்
Personal Class & Group Class
அனுபவமிக்க ஆசிரியரினால் விரிவான விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
076 843 1371
(967)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

WESTERN UNION MONEY TRANSFER · MoneyGram · DHL · Dialog · Money Master · Ria · aramex · Enriching Your Life
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள், சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமான சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.
ஸ்ரீமுருகன்
SRI MURUGAN
No.303, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 2670 / 5392
(C-2560)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்




விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2561)

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503
(3525)


# எமது குடும்பத்தின் அன்புச் செல்வங்களின்

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்





அமரர்

## நிஜந்தன் நித்திஸ்குமார்

நான்கு ஆண்டுகள் ஆனாலும் அழியவில்லை எம் சோகம்
வாழ்க்கை என்ற வசந்த காலம் வரும் போதே எம்மை விட்டு
கணப்பொழுதில் சென்றதும் ஏனோ?
கலைந்து செல்லும் மேகமென காலங்கள் கடந்து போகின்றனவே
ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம் இதயமதில் ரணமாய் வலிக்கின்றதே.
எம் ஆருயிர் தெய்வமே! செல்வமே!
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் இராசநாயகம் நித்தியானந்தம்

5 ஆம் வட்டாரம், மயிலிட்டிக்கரை.

தகவல் : மூத்த மருமகன்

(C-2555)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org